G.C.E. (A'L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி:
3–4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4–5 MECHANICS
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ.2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

DAY CLASS
A/L PHYSICS
* MECHANICS
ஆரம்பம் - 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON - FRI - 7-30 A.M
by
SATHTHIYASEELAN

NEW MASTER
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ கார்த்திகை மீ 13 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 26 (29-11 1986) SANJEEVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :45

## கருத்துக் கலசம்

### தர்ம உண்டியல்

நாவலர் பெருமான் சைவத்தையும், தமிழையும் இரு கண்கள்போல் போற்றி வளர்த்தவர் அவர் மொழியையும் சமயத்தையும் வளர்க்கும் தொண்டில் மட்டுமன்றி தர்மப் பணிகளையும் செய்து வந்தார்.

வறுமையில் வாடும் மக்களுக்கு கஞ்சித் தொட்டிப் பணி செய்தார் இதனை வார இறுதியில் நடந்த நாவலர் விழாவில் பேசிய பேராசிரியர் சண்முகதாஸ் குறிப்பிட்டுக் கூறினார்.

எமது மத்தியில் அகதிகளாக வாழ்வோருக்கு - வெளியிடங்களில் இருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு நாமும் உதவி செய்ய வேண்டும். அதுவே நாம் நாவலருக்குச் செய்யும் குருபூசை என்றும் அவர் வலியுறுத்தினார்.

வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அறம் செய்ய வேண்டும் என்று எமது முன்னோர் வலியுறுத்தினர்கள். லட்சம் லட்சமாகக் கொட்டிக் கொடுப்பது தான் அறம் – தர்மம் என்று எண்ணக்கூடாது.

ஒவ்வொருவரும் தமது வசதிக்கு ஏற்ப, வருவாய்க்கு ஏற்பத் தர்மம் செய்யலாம். அதாவது தனக்கென உள்ளதில், ஒரு பகுதியை யாவது உள்ளம் விரும்பி மற்றவனுக்கு கஷ்டப்படுபவனுக்குக் கொடுப்பதே அறம்.

தனக்கு இருக்கும் வசதியில், பொருளில் பிறனுக்கு வசதி செய்வதற்கு, வழங்குவதற்கு மனம் வேண்டும்.

அந்த மனப்போக்கை சிறுவயதிலேயே உருவாக்கிவிட வேண்டும். அறம் செய்யும் பழக்கத்தைச் சிறு வயதில் வளர்ப்பதற்காகவே வீடுகளில் தர்ம உண்டியல்கள், பிடி அரிசிப் பானைகள் போன்ற திட்டங்களை நமது முன்னோர்கள் கைக்கொண்டார்கள்.

அவற்றை நாம் வீடு தோறும், பாடசாலை தோறும் மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும். சிறுவர்கள், மாணவர்கள் தமக்குச் செலவுக்குப் பெற்றோர் கொடுக்கும் சில

(8-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகமாணவர்

# உண்ணாவிரதத்தை கைவிட்டனர்

## எனினும் விஜிதரன் மர்மம் தொடர்ந்து நீடிக்கிறது

யாழ்ப்பாணம். நவ. 29

பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் மர்ம மறைவையடுத்து பல்கலைக்கழக மாணவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரை உண்ணாவிரத போராட்டம் பத்து நாட்களின் பின்னர் நேற்று இரவு கைவிடப்பட்டது.

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த ஆறு பேரும் நேற்று இரவு சுமார் 7 மணியளவில் தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர்.

எனினும் விஜிதரன் மறைவு தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது போராட்டங்களை வேறு வழிகளில் தொடர்ந்து நடத்துவர் என அறிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதப் போராட்டத்தின் ஆரம்பத்தில் மாணவர்களினால் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்ட உறுதி மொழியை அடுத்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

* பல்கலைக் கழகத்தில் நடந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சகலரதும் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கிறோம்.

* பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வெளியே கைது செய்யப்பட்டால் அதுபற்றி கூடியவிரைவில் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டும்

* மாணவர்களது வேண்டுகோளுக்கு மட்டுமன்றி எம்மீது சுமத்தப்பட்ட தப்பபிப்பிராயத்தை நீக்குவதற்காகவும் விஜிதரனை தேடுவதில் முழுமூச்சாக ஈடுபடுவோம்.

-இவை புலிகளால் நேற்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

உண்ணாவிரதம் கைவிடப்பட்டதை அடுத்து ஆறு உண்ணாவிரதிகளும் உடனடியாக யாழ்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்றைய உண்ணாவிரதப் போராட்டத்தை மாணவர் அமைப்புக்குழு தலைவர் திரு. எஸ். ஜோதிலிங்கம் முடித்து வைத்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## இன்று டிக்ஸிற் திரும்புகிறார்

கொழும்பு, நவ. 29

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் இன்று (சனி) கொழும்பு திரும்புகிறார்.

உடனடியாக அவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்திப்பார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஐ-எ)

## தொலைத் தொடர்பு அலுவலகம்மீது சூடு!

### ஐந்து பேர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். தொலைத் தொடர்பு திணைக்களத்தை நோக்கி நேற்று சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் மூன்று ஊழியர்களும் இரண்டு பொதுமக்களும் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை பத்து மணி அளவில் ஊழியர்கள் தமது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பண்ணை பொலிஸ்விடுதியில் தங்கியுள்ள சிப்பாய்களே இந்தத் தாக்குதலை நடத்தினர்.

திடீர் என மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து ஊழியர்கள் நிலத்தில் விழுந்து படுத்துக்கொண்டனர். இதனால் அவர்கள் உயிர் தப்பினர்.

அலுவலகத்தின் பல பகுதிகள் பலத்த சேதமடைந்துள்ளன. (உ-10)

## ஹெலியிலிருந்து பிரசுரங்கள்

நேற்று ஹெலிக்கொப்டரில் இருந்து கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்தப் பிரசுரங்கள் அமைந்திருந்தன (உ-10)

## அனுரா கிண்டல்

# இஸ்ரவேலின் பயிற்சி பெற்ற இராணுவத்தினரால் புலிகளிடம் இருந்து சிப்பாய்களை மீட்க முடியவில்லையே!

கொழும்பு, நவ 29

உகண்டாவில் என்டபே விமான நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பணயக்கைதிகளை மீட்ட இஸ்ரவேலியரிடம் பயிற்சி பெற்ற எமது இராணுவத்தினரால், யாழ் கோட்டை முகாமில் இருந்து சில யார் தூரத்தில் புலிகளினால் சிறை வைக்கப்பட்டுள்ள இரண்டு சிப்பாய்களை மீட்டு எடுக்கமுடியவில்லையே!

இப்படிக் கிண்டல் செய்தார் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா.

நேற்று நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு விவாதம் நடந்தது.

அப்போது பேசுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இப்படிச் சொன்னார்

அவர் மேலும் கூறியதாவது: சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் இஸ்ரவேலுடனான ராஜதந்திரத் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்படும்.

தென் ஆபிரிக்கா, இஸ்ரவேல் நாடுகளுடன் தொடர்புகளை இலங்கை வைப்பதை சுதந்திரக் கட்சி எதிர்க்கும்.

இஸ்ரவேல் ஜனாதிபதியின் கொழும்பு விஜயம் பலஸ்தீன் விஷயத்தில் இலங்கையின் நிலை என்ன என்ற கேள்வியை எழுப்பியுள்ளது

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்க சொன்னார்.

வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது பேசுகையில், இஸ்ரவேலுடன் ராஜிய உறவுகளை முழு அளவில் இலங்கை வைத்துக் கொள்ளாது

கொழும்புக்கு விஜயம் செய்யப் போவதாக இஸ்ரவேல் ஜனாதிபதி எமக்கு அறிவித்தார். நாம் அதனை ஏற்றுக் கொண்டோம்'' என்று சொன்னார். (அ-ஐ-எ)

## படையினர் சூட்டுக்கு

# மூதூரில் எட்டுப் பேர் பலி!

திருகோணமலை, நவ. 29

மூதூர்த் தொகுதியில் அண்மையில் நிகழ்ந்த இரண்டு சம்பவங்களில் 8 தமிழர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

### முதலாவது சம்பவம்

மூதூர்த் தொகுதியில் உள்ளது சுங்காங்கேணி என்ற தமிழ்க் கிராமம்.

இங்கு ஆயுதப்படையினர் அண்மையில் தேடுதல் நடத்தினர்.

அப்போது ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 தமிழர் உயிரிழந்தனர். அனைவரும் கிராம வாசிகள் என்று அறிவிக்கப்படுகிறது.

### இரண்டாவது சம்பவம்

மூதூர்த் தொகுதியில் உள்ள கட்டைப்பறிச்சான் கிராமத்தில் மற்றைய சம்பவம் நிகழ்ந்தது.

அங்குள்ள ஆறு ஒன்றில் இறால் பிடித்துக் கொண்டிருந்த தமிழ்ச் சிறுவர்களில் சிலரை நோக்கி பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர்.

மற்றத் தமிழ்ச் சிறுவர்கள் ஓடித் தப்பிக் கொண்டனர். (உ-எ150)

## இலங்கை வீரர்களுக்கு இந்திய அரசு அனுமதி

கொழும்பு, நவ. 29

இலங்கை கிரிக்கெட் குழு, இந்திய விஜயத்தை மேற்கொள்ள இந்திய அரசு இறுதி அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இதுவரை இலங்கைஅணியின் விஜயம் குறித்து அனுமதி வழங்கும் விஷயத்தில் இந்திய அரசு மௌனஞ் சாதித்து வந்தது.

அங்கீகாரம் கிடைத்ததைத் தொடர்ந்து இலங்கை அணி டிசம்பர் 6ஆம் திகதி புதுடில்லி செல்லும்.

இலங்கையில் நடந்த கிரிக்கட் போட்டி, சர்வதேச மாநாடு ஆகியவற்றை இந்தியா புறக்கணித்து வந்தது தெரிந்ததே. (உ-ஐ-எ)

## ராஜீவ், ஜே. ஆரின் கொடும்பாவி எரிப்பு

கரவெட்டி, நவ. 29

பருத்தித்துறை பொது மக்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தன, ராஜீவ் காந்தி ஆகியோரின் கொடும்பாவிகளை நேற்று எரித்தனர்.

பருத்தித்துறையில் இருந்து யாழ் வீதிவழியாக கொடும்பாவியையெடுத்து வந்து மந்திகைச் சந்தியில் அதனைத் தீமூட்டி ஒப்பாரி வைத்து எரித்தனர்.

புலோலி சந்தி, மந்திகைச்சந்தி ஆகிய இடங்கள் ஊடாக கொடும்பாவியை அவர்கள் பறை அடித்து இழுத்து வந்தனர்.

(உ-70)

## வெளிவாரிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

### துணைவேந்தர் வித்தி ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ 29

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணி, விஞ்ஞானமாணிப் பரீட்சைகள் இம்முறை யாழ்ப்பாணத்தில நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசிச் செய்துள்ளார்

இப்பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த யாழ் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதிப்பத்திரங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகம் இரு தினங்களுக்கு முன்னர் அனுப்பி வைத்து விட்டது.

எனினும் அவை கிடைக்கப்பெறுத பரீட்சார்த்திகளை 1 – 12 – 86 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் தம்மோடு தொடர்பு கொள்ளுமாறு துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் கேட்டுள்ளார். (அ)

## ஊழியர்கள் வேலைக்குச் செல்ல மறுப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். தொலைத் தொடர்பு ஊழியர்கள் இன்று வேலைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர்

நேற்று தொலைத் தொடர்பு திணைக்களத்தை நோக்கி பண்ணையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்தே இவர்கள் வேலைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர். (உ-10)

## இந்திய அமைச்சர் குழு நாளை மறுதினம் வரும்

புதுடில்லி, நவ. 29

இந்திய இணை அமைச்சர் குழு, அனேகமாக நாளை மறுதினம் திங்கட்கிழமை அளவில் கொழும்பு விஜயத்தை மேற்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இக்குழு இன்றும் நாளையும் சென்னையில் தங்கி நின்று தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்திக்கும்.

இந்திய யோசனைகளுக்கு எழுத்து மூலமான பதிலை இந்தியா கேட்டதைத் தொடர்ந்துதான், இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின எழுத்து மூலமான பதிலுடன புதுடில்லிக்குக் கடந்த வியாழன் புறப்பட்டுச் சென்றார்.

(உ-ஐ-எ)

## மூதூரில் புதிய முகாம்

திருகோணமலை, நவ. 29

மூதூர், தோப்பூர் சந்தியில் புதிதாக இராணுவமுகாம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து முகாமைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் குடியிருக்கும் தமிழரில் பெரும்பாலோர் இடம் பெயர்ந்துவிட்டனர்.

இராணுவக் கெடுபிடிகளைப் பொறுக்கமுடியாமலே இத் தமிழர்கள் குடிபெயர்ந்தனர் என்று தெரிகிறது.

(உ-எ-150)

## இனப்பிரச்சினை

# நத்தாருக்கு முன் தீர்வு இலங்கை அரசு நம்புகிறதாம்

கொழும்பு, நவ. 29

நத்தாருக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஒன்று காணப்படும் என்பதில் இலங்கை அரசு தீவிர நம்பிக்கை கொண்டிருக்கிறதாம்

–இப்படி கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்றும் கட்டப் பேச்சுக்கள் புதுடில்லி அல்லது சென்னையில் நடைபெறும் என்றும் இதில் போராளிகள் கலந்து கொள்ளக் கூடும் என்றும் இனப்பிரச்சினைக்கு இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு நத்தாருக்கு முன்னர் காணப்பட்டுவிடும் என்றும் இலங்கை அரசு நம்பிக்கை கொண்டுள்ளதாம்

கொழும்பு அரசுவட்டாரங்கள் இப்படித்தெரிவித்தன. (உ-ஐ-எ)

### சுபநேரம்

29 11–1986
சனிக்கிழமை

சுபநேரம்:
3.13 முதல் 4 43 வரை
ராகுகாலம்:
9.13 முதல் 10.43 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும் சனிப் பிரதோஷ விரதம்

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய

## அறிவித்தல்

உங்களுடைய சௌகரியத்திற்காக ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எங்களது கொம்பனியில் விற்பனை செய்யப்பட்ட சகல பொருட்களும் எங்களது செம்மணி வீதி நல்லூரிலுள்ள தொழிற்சாலையிலும் இன்று தொடக்கம் விற்பனை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

சாமுவேல் சன்ஸ்
அன் கொம்பனி லிமிட்டட்,

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
27-11-86.

## தொலைபேசி திருத்த

# கம்பத்தில் ஏறியவர்மீது ஹெலியிலிருந்து சூடு!

யாழ்ப்பாணம், நவ. 29

தொலைபேசிக் கம்பத்தில் ஏறி திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த ஊழியரை நோக்கி ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் கொட்டடிப் பகுதியில் தொலைத் தொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் தொலைபேசிக் கம்பிகள் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்பொழுது மழையும் பெய்துகொண்டிருந்தது

திடீரென அப்பகுதிக்கு வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று தொலைபேசிக் கம்பத்தில் இருந்த ஊழியரை நோக்கி திடீர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டது.

எனினும் ஊழியர்கள் தெய்வாதீனமாகக் காயமெதுவுமின்றி உயிர் தப்பினர். (உ-10)

திருமண அழைப்பு

மணமகன்: சரவணபவன் (கிர்வாக இயக்குனர் ஷப்ஜு - உதயன் - சஞ்சீவி)
ஐஸ்வரியநாதம் தம்பதியினர் சிரேஷ்ட புத்திரன்

மணமகள்: யசோதை (கடேசபிள்ளை தம்பதியினர் ஏகபுத்திரி)

இடம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில்
காலம் - 6.12.86 சனிக்கிழமை
முகூர்த்தம் - நண்பகல் 11 மணி முதல் 12-30 வரை

தங்கள் நல்வரவையும் வாழ்த்துக்களையும் விரும்பும்

திரு. செ. கடேசபிள்ளை தம்பதியர்
திரு. ஐஸ்வரியநாதம் தம்பதியர்
292/2 ... வீதி
யாழ்ப்பாணம்

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிபடாத தமிழர் தாயகம்: அதுவே அர்த்தமுள்ள அரசியல் தீர்வு

## இலங்கை யோசனையை நிராகரித்தது ஏன்? எம். ஜி. ஆருக்கு பிரபாகரன் எழுதிய கடிதம்

இலங்கை அரசின் யோசனைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் – தளபதி வே. பிரபாகரன் அளித்த பதில் அர்த்தமுள்ளதாக இருந்தது என்று 'புரொன்ட்லைன்' கருத்துத் தெரிவித்துள்ளது.

திரு. பிரபாகரன் அப்பதிலை தமிழக முதலமைச்சர் மூலம் இந்திய அரசுக்குச் சமர்ப்பித்திருந்தார்.

அப்பதில் கடிதம் இங்கு முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது.

சென்னை,
3.11.1986

இலங்கை அரசின் யோசனைகள் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கருத்துக்கள்.

ஸ்ரீ. எம். ஜி. இராமச்சந்திரன்,
முதலமைச்சர்,
தமிழ்நாடு.

மதிப்புக்குரிய ஐயா,

இலங்கை அரசின் யோசனைகளை மிகவும் கவனமாகப் படித்தோம். எமது மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதானதாக அவை அமையவில்லை என்பதை நாம் காணுகின்றோம். கடந்த ஆண்டு திம்புவில் நாம் சமர்ப்பித்த அடிப்படை இலட்சியங்களில் ஒன்றைத்தானும் பரிசீலனை செய்ய மறுப்பதாக யோசனைகள் அமைந்துள்ளன.

**தாயகம் சம்பந்தமாக விட்டுக்கொடுக்க முடியாது**

எமது தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற அடிப்படை கோரிக்கையை மறுப்பதாக தனியான மாகாண சபை அமைப்புக்கள் இருக்கின்றன.

தாயகம் சம்பந்தமாக விட்டுக்கொடுக்க முடியாத உரிமை தமிழருக்கு உண்டு என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக அடையாளம் காணக்கூடியதாக, தொடர்ச்சியான தாயகமாக இது உள்ளது. தமிழ் பேசும் மக்களின் சரித்திரரீதியான தாயகம் இது. ஆகவே இது பிரிக்கப்பட முடியாத ஒன்று.

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு அர்த்தமுள்ள நிரந்தரத்தீர்வு ஒன்றைக் காணுவதற்கு தமிழர் தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாடு அங்கீகரிக்கப்படவேண்டும்.

இலங்கை அரசின் யோசனைகள் தமிழர்



தாயகத்தைப் பிரிப்பதாக அமைந்தள்ளது.

ஆகவே அவை தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன.

சிங்களவரும் முஸ்லிமும் கிழக்கு மாகாணத்தில் உள்ளனர் என்று அரசு கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியே கிழக்கு மாகாணம். இம்மாகாணத்தில் பண்டைக் காலத்தில் இருந்து தமிழரும் முஸ்லிமும் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழரின் தாயகத்தைத் துண்டாடும் முயற்சியில் பதவி வகிக்கும் அரசாங்கங்கள் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தன. இது அனைவரும் அறிந்த ஒன்று.

வடக்கும் கிழக்கும் இரண்டு தனி மாகாண சபைகளாக இயங்க அனுமதிப்பது, தமிழரின் பிரதேச ஒருமைப்பாட்டை சிதைத்து விடும் என்று தமிழர் பயப்படுகின்றனர். இது சட்டபூர்வமான அச்சமாகும்.

**அர்த்தமுள்ள அரசியல் தீர்வு**

பிரிபடாத தமிழர் தாயகம் என்ற அடிப்படையை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஒன்றைக் காண முடியும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

அரசின் யோசனைகளை துருவிப்பரிசீலனை செய்யுமிடத்து, அவற்றில் பாரதூரமான குறைபாடுகளைக் காணுகிறோம். மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் விஷயங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்களை நாடாளுமன்றம் வைத்துக் கொள்ளவும் ஜனாதிபதி வைத்துக் கொள்ளவும் அரசின் யோசனைகள் வ.. செய்துள்ளன.

கோட்பாட்டிலும் செயல்பாட்டிலும் இவை யதார்த்த பூர்வமாக இல்லை.

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்பதாக இல்லை.

**ஜனாதிபதியிடம் அதிகாரங்கள்**

இனவாத ஜனாதிபதியிடம் அதிகாரங்களைக் குவிக்கும் ஒற்றையாட்சி அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டதாகவே மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் விஷயங்கள் பட்டியலும் பொதுப் பட்டியலும் அமைந்து உள்ளன.

நாடாளுமன்றத்துக்கு மேலாதிக்க அதிகாரங்



கள் வழங்கப்பட்டுள்ளதால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் சட்டவாக்க அதிகாரங்கள் அர்த்தமில்லாத நிலையை அடைகின்றன.

பொதுப் பட்டியலில் உள்ள விஷயங்கள் குறித்து சட்டங்கள் இயற்றினால் முதலில் மாகாணசபை, நாடாளுமன்றத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

ஆகவே நாடாளுமன்றத்துக்கு வழங்கப்படும் அதிகாரங்கள், மாகாண சபைக்கு வழங்கப்படும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துகின்றன.

நாட்டுக்கு தவிர்க்க முடியாத ஆபத்து ஏற்படுகிறது என்று ஜனாதிபதி கருதி செயல்பட அவருக்கு எல்லையற்ற அவசரகால அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவசரகாலச் சட்டப் பிரகடனத்தைத் தொடர்ந்து மாகாண சபைகளைத் கலைத்து முதலமைச்சரின் அதிகாரங்களை ஜனாதிபதி ஏற்க முடியும்.

மாகாணசபை இயற்றும் சட்டத்தை செல்லுபடியாக்கும் விஷயத்தில் ஜனாதிபதிக்கும் அவரது பிரதிநிதியான ஆளுநருக்கும் அதிக அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

மாகாணசபை இயற்றும் எச்சட்டத்தையும் தன் எண்ணத்துக்கு ஏற்றபடி ஜனாதிபதி தூக்கி எறியலாம்.

சட்டம்-ஒழுங்கு விஷயத்தில் கூட மத்திய அரசுக்குத்தான் மேலாதிக்க அதிகாரம் உண்டு.

மாகாண பொலீஸைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் பொலீஸ்மா அதிபருக்கும் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**காணிப் பிரச்சினை**

திருப்திகரமான முறையில் தீர்வுகாணப்படாத மற்ற பிரச்சினை காணி சம்பந்தமானது.

மாகாணங்களுக்கு இடையேயானதும் காணி அபிவிருத்தி சம்பந்தமானதுமான பூரண அதிகாரங்கள் மத்திய அரசிடம் வழங்கப்பட்டுள்ளன.

அது மட்டுமல்ல, மாகாணசபையின் கீழ் வரும் காணி பகிர்வு, ஒதுக்கீடு முதலியனவும் ஆளுநரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**பொலீஸ்படை**

மாகாண பொலீஸ் படையின் பிரதி பொலீஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி அல்லது பொலீஸ்மா அதிபருக்கு வழங்கப்படுகிறது.

அவசரகால நிலைமையில் சட்டம்–ஒழுங்கை பராமரிப்பது என்ற பெயரில் தேசிய பொலீஸ் படையை மாகாணசபை எல்லைக்குள் பயன்படுத்தும் அதிகாரமும் பொலீஸ்மா அதிபருக்கு வழங்கப்படுகிறது.

இது மாகாண பொலீஸ்படையை அதிகாரமற்ற ஒன்றாக்கும். இதனால் தமிழரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த அடிப்படையில் இலங்கை அரசு தமிழர் காணிகளில் தீவிரமான குடியேற்றத்திட்டங்களை காணி அபிவிருத்தி என்ற போர்வையில் செயற்படுத்தி வருகின்றது.

இலங்கை அரசு சமர்ப்பித்த யோசனைகளில் காணப்படும் அடிப்படைக் குறைபாடுகளை நாம் சுருக்கமாகத் தெரிவித்துள்ளோம்.

தமிழர் தாயகம் என்ற சட்டபூர்வமான உரிமையை, மற்றும் விட்டுக்கொடுக்க முடியாத, சட்டபூர்வமான அபிலாஷைகளை இலங்கை அரசு அங்கீகரிக்கும் வரை தமிழ்த் தேசியப் பிரச்சினையில் அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வைக் காணமுடியாது. இதை நாம் தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகிறோம்.

**அரச பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி**

இலங்கை அரசுக்கு அமைதியைக் கொண்டு வரும் விருப்பம் உண்மையாக இருக்குமானால், அப்பாவித் தமிழரைக் கொல்லும் அரச பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்; தமிழர் பகுதிகளில் முகாம்கள் அமைத்து இராணுவமயப்படுத்துவதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

அமைதிவழி மூலம் அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர், இந்திய அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம்.

எமது மக்களின் சுதந்திரம், சுயகௌரவம், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண இந்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு எமது விடுதலை இயக்கம் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

நன்றி.

உங்கள் உண்மையுள்ள
(வேலுப்பிள்ளை பிரபாகரன்)
தலைவர் – தளபதி,
தமிழீழ விடுதலைப்புலிகள்

## கடல் கடந்த கடிதம்

### காகம் காட்டும் கருத்தென்ன?

தம்பி,

கொடுக்க மனமில்லாதவர்கள், உரிமைக்காக வாதாடுபவர்களைக் கொடும் வார்த்தைகளால் விமர்சிப்பதைப்பற்றி எழுதியிருந்தாய்! இவர்களுக்குத்தான், தம்பி, திருவள்ளுவர் காகத்தைக் காட்டி நல்ல கருத்தைத் தருகிறார்– பொதுவுடமைத் தத்துவத்தையே புரிய வைக்கிறார்!

காகத்தைப் பார்! தனக்குப் பெருவிருந்து இடைத்தால் பதுக்காது; கா! கா! எனக் கரையும்; தன் இனத்தைக் கூவி அழைக்கும்; பலரோடும் பகுத்துண்ணும்! தனக்குக் கிடைத்ததைப் பதுக்கி வைக்காது, கொடுத்து வாழப் பழகியவர்களுக்குத்தான் செல்வம் சேரும்: நிலைத்தும் நிற்கும்!

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள" (குறள்-527)

"மயிலே இறகு தா என்றால் தராது; பறித்துத்தான் எடுக்க வேண்டும்!" என்ற கருத்து வேகமாகப் பரவுமுன், மக்கள் காகங்களாக மாறிவிட்டால் சமுதாயத்தில் வீண் சச்சரவுகள், ஏற்றத்தாழ்வுகள் குறைந்துவிடும்.

எல்லோரும் உழைத்துத்தான் உண்ணவேண்டும் இதில் இருவேறு கருத்துக்கள் கிடையா. நிம்மதியாக – பாதுகாப்பாக – உழைத்துண்ண சமுதாயத்திற்கு வேண்டிய சுதந்திரத்தையும் உரிமைகளையும் வென்றெடுக்க உழைப்பவர்களும் உழைப்பாளிகளே! அவர்களும் உண்டு வாழக் கொடுத்துதவ வேண்டியது, தம்பி, நமது கடமையல்லவா?

கார்ல் மாக்ஸ், மாசேதுங் என்று, சித்தாந்தங்களுக்கு, அங்கிங்கு அலையாதே! வள்ளுவர் தந்த கருத்துக்களைக் காலத்தோடு சேர்த்து மீளாய்வு செய்து பார் - பாடங்கள் பல பெற்றிடுவாய்!

காலவெள்ளம் வந்து கரைத்து விடுமுன் காகம் காட்டும் கருத்தைக் கவனி; செயற்படு!

அன்புடன்
— சிவா —

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது. (இது இலங்கை வங்கியின் 28 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40. 21 |
| அமெ. டாலர் | 28. 35 |
| இந்திய ரூபா | 2. 15 |
| மார்க் ஜேர்மனி | 14. 25 |
| கனடா டாலர் | 20. 21 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 34 |
| பிராங் (சுவிஸ்) | 16. 89 |
| அவுஸ். டாலர் | 18. 15 |


விளம்பரம்

## உங்களுக்குத் தெரியுமா?

சவர்க்காரங்கள் எல்லாமே எரிசோடாவும் தேங்காய் எண்ணையும் கலந்துதான் தயாரிக்கப் படுகின்றன. ஆனால் ஒரு நல்ல சலவை சவர்க்காரத்தில் எஞ்சிய எரிசோடாவாக (Free caustic Alkalie) 0.02 வீதத்திற்கு மேல் இருத்தல் கெடுதலானது. துணிகளில் அழுக்கை அகற்றுவது சவர்க்காரத்தின் நுரையேயன்றி எரிசோடாவாக இருக்கக் கூடாது. மிதமிஞ்சிய எரிசோடா அழுக்கை துரிதமாக அகற்றும். ஆனால் கைகளுக்கும் துணிகளுக்கும் கெடுதலை ஏற்படுத்தும்.







கைகளில் எரிவை ஏற்படுத்துவதும் இலகுவில் கழுவுப்படாது இருத்தலும் மிதமிஞ்சிய எரிசோடாவின் அறிகுறி.

சிறிதளவு சவர்க்காரத்துடன் பெரிய அளவில் நுரையைத் தருவதும் கைகளுக்கு மென்மையாக இருத்தலும், அழுக்கை அகற்றுவதில் மேன்மையான தும், இலகுவில் கழுவப்படுவதும் நல்ல சவர்க்காரத்தின் ...

## சிக்மாபம்ப்ஸ் இடம் மாற்றம்

எமது ஸ்தாபனத்தின் விற்பனை நிலையம் 28-11-86 முதல் 533, ஸ்ரான்லி வீதி (ஸ்ரான்லி வீதி, ராசாவின் தோட்டம் வீதி, சந்தி) க்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. உங்கள் 'சிக்மா பம்ப்ஸ்' தேவைகளுக்கும், திருத்துதல் சேவைகளுக்கும் (Repairs & Service) எமது புதிய விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

யுனைரெட் அக்ரோ என்ஜினியர்ஸ்
533, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22747

## பிரயாண ஒழுங்குகள்

GLORIA TRAVEL

● கனடா ● சுவிட்சர்லாந்து
● ஜேர்மனி ● பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வார்.

மற்றும் பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.


# அரசாங்க அலுவலகங்களில்....

"சிகதி"

### இடம் மாறினும் மனம் மாறுமா?

இந்த நாட்டில் இயங்கும் கைத்தொழில்கள் பல வெளிநாட்டு மூலப் பொருள்களையே நம்பி இருக்கின்றன. புடைவை உற்பத்தியும் அவற்றில் ஒன்று அரச – கூட்டுறவுத் திணைக்களங்களின் கீழ் இயங்கும் நெசவு நிலையங்கள் உற்பத்தி செய்யும் துணிவகைகள் தரமுள்ளவையாக இருக்கவேண்டும். அப்போது தான் அவை இறக்குமதியாகும் வெளிநாட்டுத் துணிகளுடன் போட்டி போடமுடியும் சந்தையைப் பிடிக்க இயலும்.

நெசவுத் தொழிலுக்குத் தேவையான நூல் வகைகளின் இறக்குமதியைக் குறைத்தால் தரமான துணிகளை உற்பத்தி செய்வது எப்படி?

* * *

திணைக்களங்களில் கடமை புரியும் உயர் அதிகாரிகள் அரசியல் செல்வாக்கின் நிமித்தம் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய முடியாது போவதும் உண்டு. வேறுசில வேளைகளில் தம் மனச்சாட்சிக்கு மாறானவற்றையும் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அச்சமயங்களில்சில அதிகாரிகள் வேலையைவிட்டு விலகுகின்றனர். இவர்கள் வசதி உள்ள வரிசையைச் சேர்ந்தவர்கள். ஓர் உயர் அதிகாரி சில ஆண்டுகளுக்கு முன்னர் கருத்து வேற்றுமை காரணமாகப் பதவியில் இருந்தும் உடன் ராஜினாமாச் செய்யவேண்டி நேர்ந்தது. விலகுவதானால்முன்னறிவித்தல் அல்லதுஅதற்குரியஒருமாதச் சம்பளம் திணைக்களத்திற்கு செலுத்தவேண்டும். காசோலை மூலம் பணத்தை செலுத்திவிட்டு பதவியையும் உதறித்தள்ளிவிட்டார். இப்படி ஆயிரத்தில் ஒருவர்!

* * *

திணைக்களம் பற்றிய செய்திகளை தினசரி பார்க்கும் பொழுது அங்கு கடமையாற்றும் ஒருசிலர் மனித நீதிக் கோவைகளுக்கு உட்பட்டவர்களா அல்லது விலக்கப்பட்டுள்ளவர்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அண்மையில் இடம் பெற்றதான ஒரு மோசடி மிகவும் விசித்திரமானது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலீஸ் திணைக்கள வாகனங்கள் திருத்தும் நிலையத்தில் உள்ள உதிரிப்பாகங்கள் தனியார் கடைகளுக்கும் தனியாருக்கும் விற்கப்பட்டுள்ளதாகவும் புதிய வாகனங்களில் உள்ள இயந்திரங்களை உயர் அதிகாரிகளின் சொந்தவாகனங்களுக்கு பொருத்தி உள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனால் அங்கு கடமைபுரியும் பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இடம் மாறினாலும்— மனம் மாறுமா என்பது தான் கேள்வி.


சங்கானை ப. நோ. கூ. ச. (வ. உ.)

## பொது முகாமையாளர் தரம் II பதவிக்கான வெற்றிடம்

மேற்காட்டிய பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது:

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 7 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்: அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையாக பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

சம்பளம்: 800 —1250 / 40 X 5 — 50X5

எல்லா விபரங்களும் இணைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவம் ரூபா 2-00 செலுத்திச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பெற்ற விண்ணப்பப் படிவங்கள் யாவும் 15-12-86 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக 'தலைவர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை''. என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

வ. கிருஷ்ணசாமி
தலைவர்,
26-11-86. சங்கானை ப. நோ. கூ. ச.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அறம்; அதுவே பலருக்கும் நல்வாழ்வு தரவல்லது

மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

மக்கள் இவ்வுலகில் நல்வாழ்வு வாழவும், இன்னல்கள் நீங்கி இன்பம் பெறவும், அறத்தை வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். அறம் இறைவனின் உயர் பண்பென்று கருதப்படுகிறது.

வள்ளுவர் பெருமானும் 'அறவாழி அந்தணன்' என்று கூறியுள்ளார். ஒளவையாரும் 'அறஞ் செய்ய விரும்பு' என்று கூறி எல்லோருக்கும் தர்ம கைங்கரியங்களைச் செய்வதற்கு ஒரு விருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். உலகில் வாழும் மக்களுக்கு நன்மை பயக்கும் செயல்கள் எல்லாம் அறத்தின் பாற்பட்டவை எனலாம்.

அதே சமயம் தீமை பயக்கும் முயற்சிகளை தவிர்ப்பதும் அறமாகும்.

அறத்தை மனம், மொழி, காயம் ஆகிய மூன்றினாலும் உடன்பாடு முறையாகவும் எதிர்மறை முறையாகவும் மேற்கொள்ள வேண்டும். எமது எல்லா செய்கைகளும் மனதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற' என்று திருவள்ளுவரும் அறத்தின் சிறப்பினை வற்புறுத்தியுள்ளார். அரசன் முதல் சாதாரண மக்கள் வரை எல்லோரும் அறநெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் அமைதியான, நிறைவு பெற்ற வாழ்வு வாழ முடியும் என்பது திண்ணம்.

ஆட்சியாளர் அறம் தவறாது ஆட்சி செலுத்தி மக்கள் நலனை கருத்திற் கொள்ள வேண்டும். முற்காலத்தில் மன்னர்கள் நீதி தவறாதவர்களாக நல்லாட்சி செய்தனர். அறநெறி நின்று மறங் கடிந்து அரசர் போற்ற மநுநீதிச் சோழன் ஆட்சி செய்தான் என்று அறத்தின் சிறப்பை சேக்கிழார் சுவாமிகள் பாடியுள்ளார்.

நீதி வழங்குவதற்கு 'அறங்கூறு அவையம்' என்ற நீதிமன்றங்கள் இருந்தன.

மக்களுடைய வாழ்க்கையும் அறத்தின் அடிப்படையில் இல்லறம் துறவறம் என வகுக்கப் பட்டுள்ளது இல்வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் பிறரை அறநெறிப்படி வாழச் செய்து தாமும் அறம் தவறாது வாழ்வார்களேயானால் அதுவே மேலான நோன்பாகும். அன்பும் அறனும் ஆகிய இரண்டும் ஒருங்கே அமைய இல்வாழ்வில் ஈடுபட்டு, விருந்தோம்பி, துறவிகளுக்கும் துன்பப் பட்டவர்களுக்கும் உறுதுணையாக இருக்கவேண்டும். கொன்றை வேந்தன் 'இல்லறமல்லது நல்லறமன்று' என்று இல்லறத்தின் சிறப்பை விளக்கியுள்ளது.

நாம் செய்கின்ற தொழில்கள் பலவாகும். மக்கள் தங்கள் அறிவு, கல்வி, ஆற்றல் என்பவற்றுக்கேற்ப பல தொழில்களை மேற்கொள்ளுகின்றனர். செய்யும் தொழில் எதுவாயினும் செம்மையாகச் செய்வது சிறந்தது. கடமை உணர்வு, பொறுப்புணர்ச்சி, தியாக சிந்தை, பிறர் நலம் பேணல் ஆகிய நற்பண்புகளுடன் தொழில் செய்வதற்கு நிகரான அறம் வேறில்லை. அறத்தின்வழி கருமமாற்றித் தேடிய செல்வம் நற் பலனைத் தரும் என்பதும் அனுபவ உண்மையாகும். பெரிய புராணம் சீரிய நெறியைக் கடைப்பிடித்து பல தொழில்களை அறவழி நின்று ஆற்றிய அடியார்கள் பெருமை பற்றிக் கூறுகிறது காரைக்காலில் வாழ்ந்த வணிகர்களை 'மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில் வழுவாமல் சீர்ப் பெரு வணிகர்' என்று அவர்களுடைய அறப் பண்பை சேக்கிழார் பெருமான் அழகாகக் கூறியுள்ளார்.

கொள்வது மிகைப்படாமலும், கொடுப்பது குறைபடாமலும் இருப்பது அறநெறி ஒழுகும் வணிகர்களுக்கு அழகு

நடமாடும் கோயில்கள் பல நம் மத்தியில் உள. ஆதரவு அற்றவர்கள் அநாதைகள், அங்கவீனர்கள், அகதிகள் ஆகியோர் என்றும் மக்களால் பேணப்படவேண்டியவர்கள். அவர்களை வாழவைப்பதன் மூலம் நாமும் வாழலாம். நாயன்மார்கள் காட்டிய நெறியும் அதுவேயாகும். பசிப் பிணியை நீக்கியும், நோயைத் தீர்த்தும் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பில.

அறச் செயல்களில் தனிமனிதனும், பொது ஸ்தாபனங்களும் ஈடுபடுவது அவசியம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களில் அறம் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக விளங்குகிறது. அறத்தை நாம் கைவிடாமல் மேற்கொண்டு வாழ்ந்தால் அறக்கடவுள் எமக்கு என்றும் தோன்றாத்துணையாக இருந்து காப்பாற்றுவார். எனவே ஏற்ற சந்தர்ப்பங்களில் அறச் செயல்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

இறக்கும் காலத்தில் அழியாத் துணையாக விளங்கும் அறத்தை இன்றே செய்வது உத்தமமான செய்கையாகும்.


இன, மத, மொழி வேறுபாட்டைக் கடந்த அறத்தைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் சகலரும் உயர்நிலை அடையலாம்.

பாரதியார் அறம் ஒன்றே மெய் இன்பம் தரும் எனவே அதனைத் துணை என்று கருதி வாழ வேண்டும். என்று பாடியுள்ளார். அறத்தின் சிறப்பை விளக்கிக் கூறிய அறிஞர்களைத் தான் அனுதினமும் போற்றுவதாகவும் கூறி அறத்தின் சிறப்பைஎடுத்துக் காட்டியுள்ளார்.

Stauffer CHEMICALS

ஐக்கிய அமெரிக்காவின்
ஸ்டோபர் கெமிக்கல் கொம்பனி
இலங்கையில் தமது விவசாய இரசாயனப் பொருட்களின்
ஏக வினியோகஸ்த்தர்களாக

அங்லோ-ஏஷியன்
பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்.
நியமிக்கப்பட்டிருப்பதை
தெரிவித்துக் கொள்வதுடன்
விவசாயிகளுக்கு
இலங்கையின் விவசாயிகளுக்கு
ஒரு நவீன தொடர் களைநாசினி
அரசோலோ 3-3E
அறிமுகப்படுத்திவைக்கிறது




331 கிரும் மொலினேட் 331 கிரும் புரப்பனில் ஒரு லீற்றரில் அடங்கும் அரசோலோ நெற்பயிரில் குதிரைவால்புல் மொண்டி மற்றும் களையினங்களை அழிப்பதுடன் களைகளின் விதைகள் முளைக்கா வண்ணம் தடுக்கும். புதிய சிறந்த தேர்வு, தொடர் களை நாசினி.

ARROSOLO 3-3E
A Product of
STAUFFER CHEMICAL COMPANY
U.S.A

எச்சரிக்கை:
எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை
கவனமாகக் கையாளவும்.

விலை ரூ. 62/-
அதற்கு மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறங்கிப் படை தவிடுபொடியானது!

# களிமண் கோட்டை தரைமட்டமானது!!

வீதிப் போர்களி லும், போர்க்களத்திலும் தோற்றோடி அரண்மிகு ந்த மண்கோட்டைக்குள் சரண்புகுந்த பறங்கியர் சுமார் இருநூறு பேரில் இருபது பேர் மண் கோட்டை வாசலில் வெடிமுழக்கி நிற்க மீதிப் பேர் மீண்டும் நல்லூர் சேனையுடன் மோத ஆய த்தம் செய்கின்றனர். பண்ணைக் காட்டிற்குள் நுழைந்த தமிழ்ச் சேனை யினர் மண்கோட் டையை நோக்கி அணி மித்து வந்து கொண்டி ருப்பதைக் கண்ட பறங் கியர் வேட்டுகளைத் தீர் க்கத் தொடங்குகின்ற னர்.

அவ்வமயம் பருத்த மரங்களின் பின்னே தம்மை மறைத்து நின்ற தமிழ்ப் போர் வீரர்கள் மெல்ல மெல்ல முன் னேறுகின்றனர்.

காட்டுமரங்கள் மத்தி யில் பறங்கியர் வேட்டு களைத் தீர்த்து என்ன லாபம்? பற்றைக்குள் இருந்த முயல்கள் வெடிச்சத்தம் கேட்டு மிரண்டு அங்குமிங்கு மாக ஓடிப்பாய்கின்றன.

பறங்கியர் தொடர் ந்து வேட்டுகளைத் தீர்க் கின்றனர். பறங்கியரின் வெடிச்சத்தம் தமிழர் படையைத் தடைசெய்ய முடியுமா? வெடி தீர்ந்த துப்பாக்கிகளுக்கு மரு ந்து நிரப்புவதற்காக கோட்டைக்குள் இருந்து

## வெற்றி விழா ஏற்பாடு! எனினும் மந்திரி முகத்தில் ஈயாடவில்லை!!

வந்த பறங்கியர் சிலர் அவைகளை வாங்கிக் கொண்டு உள்ளே ஓடு கிறார்கள்.

தமிழ் சேனையினர் மேலும் முன்னேறி மண் கோட்டை வாசலுக்குச் சமீபமாக நிற்கும் மரங் களின் பின்னால் மறைந்து நிற்க மேசைமீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த துப் பாக்கிகளை எடுத்து பறங் கியர் மீண்டும் வெடி தீர்க்கத் தொடங்குகின் றனர்.

மரங்களின் பின்னால் மறைந்து நிற்கும் தமிழ் வீரர்கள் எட்டிப்பார்ப் பதும் பறங்கியர் வேட்டு களைத் தீர்க்கும்போது மறைந்து கொள்வது மாக 'கண்ணாமூச்சி' காட்டி நிற்கின்றனர்.

இவ்வாறாக மேசையில் அடுக்கிவைக்கப்பட்டி ருந்த துப்பாக்கிகளா லும் வெடி தீர்க்கப்பட்டு முடிந்த நிலையில் கோட் டைக்குள்ளிருந்து வெடி மருந்து நிரப்பப்பட்ட துப்பாக்கிகளை பறங்கி யர் சிலர் வாசலுக்கு கொண்டோடி வரும் வேளையில் திடீரென்று தன் சேனைகளைப் பாயும் படி ஆணையிடுகிறான் தள பதி வீரமாணிக்கதேவன்.

தருணம் பார்த்து கார் த்து நின்ற தமிழர்சேனை பெருக்கெடுத்த கடலலை பொங்கிப் பாய்வது போல் மண்கோட்டை நோக்கிப் பாய்கிறது. இதைக் கண்டு வாயிலில் நின்ற பறங்கியர் கோட் டைக்குள் ஓட்டமெடுக் கிறார்கள்......

தன் அருமைப் புர வியை பறங்கியரின் துப் பாக்கி வேட்டுகளிலி ருந்து காப்பாற்றிக் கொள்ள ஆலமரமொன் றின் பின்னால் ஆவேசம் கொண்டு நின்ற சங்கிலி மன்னன் தன் உறை வாளை உருவியெடுத்துச் சுழற்றியவாறே மண் கோட்டைக்குள் பிரவே சிக்கிறான்.

இரு தரத்தாருக்கும் வாட்போர் நிகழ்கி றது... 'கோட்டைக்குள் ளிருந்து கொக்கரிப்பா'? என்று கர்ஜித்தவாறு எதிர்ப்பட்ட பறங்கிய ரையெல்லாம் வெட்டிச் சாய்த்த மன்னன் தற் காலிக தளபதியான 'டிசூசா' என்பானையும் தன் வாளுக்கிரையாக் குகிறான்.

அப்போது கீழே கிட ந்த துப்பாக்கியொன்றை எடுத்துக்கொண்டு இரு பறங்கியர் ஓடுவதைக் கண்ட பராந்தகன் அவர் களைத் துரத்திச் சென்று ஒருவனை வாளால் வெட் டியும் மற்றவன் மீது குத்தீட்டி வீசியும் உயி ரைப் போக்குகிறான்.

வேகப் புயலாய் வாள் வீசி நிற்கும் தளபதி வீரமாணிக்கதேவன் பறங்கியர் பலரை வெட்டி வீழ்த்த தமிழ்ப் போர் வீரர்கள் மூர்க் கம் கொண்டு பறங்கிய ருடன் முட்டிமோத மண்கோட்டைக்குள் வகையாக மாட்டிக் கொண்ட பறங்கியர் அங்கிங்கு ஓடவும் முடி யாமல் ஒளியவும் முடி யாமல் வெட்டிச் சாய்க் கப்படுகின்றனர்.

மின்னலெனக் சுழன்ற மன்னனின் வாள் வீச் சில் கலசிப் பறங்கி நிலத்தில் சுழன்று வீழ்ந் ததும் 'வெற்றி நமதே' என்று எக்காளமிடுகி றான் சங்கிலி மன்னன்... தொடர்ந்து வீர மாணிக்க தேவனும் பராந்தகனும் 'வெற்றி நமதே' என்று முழங்க, நல்லூர் சைன்யத்தின் இசையணியினர் உச்சத் தொனியில் வெற்றி முழக்கம் இசைக்கின்ற னர். தாரை, தப்பட்டை முழங்குகிறது:

பதினொருநாள் போரில் எல்லை கண்ட மை ந்த தமிழ்ச் சேனை எல்லை யில்லா ஆரவாரஞ் செய் கிறது.

வெற்றிப் பெருமிதத் துடன் தன் தளபதிகளை யும் சேனா வீரர்களையும் ஒரு கணம் நோக்கிய சங்கிலி மன்னன் தன் மனதுள் அவர்களை வாழ்த்தி புன்சிரிப்பை உதிர்க்கிறான்

மன்னனின் புன்சிரி ப்பைக் கண்ட தளபதி களும் சேனா வீரர்களும் அதன் அர்த்தம் புரிந்து பரவசமடைகின்றனர்

அப்பரவசத்தோடு — "வெற்றி வேந்தன் வாழ்க" என்று தளபதி வீரமாணிக்க தேவன் கோஷமெழுப்ப —

சேனா வீரர்களும் "வெற்றி வேந்தன் வாழ்க" என மண் கோட்டை அதிரும் வண்ணம் முழக்கமிடுகின் றனர்.

வெள்ளைப் பறங்கிய ருடனான பதினொருநாள் போர் யாழ்ப்பாண இராச்சியத்தின் வெற்றி யுடன் முடிவடைகிறது.

கோட்டை இராச்சி யம் உட்பட கீழைத்தேச நாடுகளெல்லாம் போ ரிலே வெற்றி வாகை சூடிய வெள்ளைப் பறங்கி யர் யாழ்ப்பாண இராச் சியத்திடம் தோற்றுப் போயினர்.

இந்த அசாதாரண வெற்றியானது அன் றைய உலகில் யாழ்ப் பாண இராச்சியத்தின் வீரதீரத்திற்கு உரைகல் லாக அமைந்து கொண் டது வெள்ளையாதிக்கம் மெது மெதுவாக கரு மேகம் போல் கீழ்த்திசை நோக்கிப் பரவி வந்த வேளை போர்க்களத்திலே அந்த ஆதிக்க வெறி யரை ஒருவர் மீதமின்றி அழித்தொழித்து வெற்றி வாகை சூடி வீரவரலாறு படைத்த சரித்திர கதா நாயகன் சங்கிலி மன் னன்றோ!

இப்பதினொருநாள் போரில் 2400 பறங்கி யர் கொல்லப்பட்டதாக சரித்திர ஏடுகள் கூறு கின்றன

தமிழ்ச் சேனையின் வெற்றி முழக்கம் மண் கோட்டைக்குள் ஒலித் துக் கொண்டிருக்கிறது.. ......மண் கோட்டையை இடித்து தரைமட்டமாக்கு மன்னன் உத்தரவிடுகி றான் அப்போது தளபதி "மன்னா அதை நாளை"... என்று சொல்லவும் "நல்ல

## பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர் அரசு (பகுதி: பதினொன்று 'ஆ')

காரியத்தை இன்று ஆரம் பித்து நாளை மறுநாள் தொடருங்கள்'' என்கி றான் மன்னன்.

அதற்கமைய மண் கோட்டை வாசலில் அடிக்கல் ஒன்று மன்ன னின் முன்னிலையில் பெயர்க்கப்படுகிறது.... அதன்பின் மன்னன் பறங்கியரின் பொருள் பண்டங்களை அப்புறப் படுத்துமாறு கட்டளை யிடவே, துப்பாக்கிகள், வெடிமருந்துப்பொதிகள் மதுவகைப்புட்டிகள் உட் பட பறங்கியரின் பெறு மதியான பொருள்கள் யாவும் கோட்டையில் நின்ற பறங்கியரின் குதி ரைச் சரத்தைகளில் ஏற் றப்பட்டு நல்லூர்க் கோட்டைக்கு அப்புறப் படுத்தப்படுகிறது.

அதையடுத்து......

போர்முரசு கொட்டி, ஏறு நடைபோட்டு மண் கோட்டை நோக்கி வந்த தமிழ்ச் சேனை இப்போது வெற்றி முழக்கமிட்டு வீர நடை போட்டு நல்லூர் கோட்டைக் குச் சென்று கொண்டி ருக்கிறது

மன்னனின் வெற்றிச் செய்தி காட்டுத் தீ போல் பரவ நாட்டு மக்கள் அளவிலா ஆனந் தம் அடைகின்றனர் எங்கும் மகிழ்ச்சி பொங்கு கிறது. தமிழர் சேனை நல்லூர் கோட்டையை அடைந்ததும் மன்னன் அரண்மனைக்குச் செல் கிறான்

வெற்றிச் செதி கேட்டு புளகாங்கிதமடைந்த நல் லூர் ராணி பெரிய நாச்சியார் வெற்றி வேந் தனுக்கு வாழ்த்துக் கூறி மலர்மாலை சூட்டி வர வேற்கிறாள்

அரண்மனை நங்கையர் வெற்றிக் கீதம் இசைக் கின்றனர்.

மன்னனின் மகன் குமா ரன் தந்தையை பூரிப் புடன் பார்க்கவும் "என்ன குமாரா அப் படிப் பார்க்கிறாய்'' என்று மன்னன் கேட்க ஒன்று மில்லை' என்பது போல் இளவரசன் தலையசைக்க அவன் கன்னத்தை செல் லமாக கிள்ளுகிறான். மன்னன்......

பறங்கியரின் மண் கோட்டை ஐந்து நாட் களாக இடிக்கப்பட்டு ஆறும் நாள் தரைமட்ட மாக்கப்படுகிறது. மண் கோட்டை இடித்துப் பரவப்பட்ட பின்னர் பண்ணைத்துறையிலும், கொழும்புத்துறையி லும் காவல் நின்ற படையணிகளை மன்னன் நல்லூர் கோட்டைக்கு திருப்பியழைத்துக்கொள் கிறான் ஆயினும் மூன்று துறைகளையும் தொ டர்ந்து கண்காணிக்கு மாறு பறவைகளுக்கு கட்டளையிடுகிறான்

வெள்ளையரை வெற்றி கூடிய நாளிலிருந்து சரியாக ஒரு திங்கள் கழித்து வெற்றி விழா கொண்டாட ஏற்பாடா கிறது ...!

— மந்திரி பரநிருப சிங்கனின் முகத்தில் ஈயாடவில்லை!!

(வளரும்)

ம. க. அ. அந்தனிசில்


# செனித் வழங்கும் புதுமைப் பரிசு!

வாசகர்களே!

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு வாசகர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் உங்கள் உறவினர்கள், நண்பர்கள், மற்றும் நீங்கள் நேசிப்பவர்களுக்கு உதயன், மற்றும் உள்ளூர்ப் பத்திரிகைகள் மூலம் இலவசமாகத் தெரிவியுங்கள்

நீங்கள் செய்ய வேண்டியது பின்வருமாறு:-

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களை, எந்தப் பத்திரிகையில் தெரிவிக்க வேண்டும் என்பதனையும், யாருக்கு தெரிவிக்க வேண்டும் என்பதனையும் தெளிவாகவும், அழகாகவும், கீழ்வரும் கூப்பனில் எழுதி 1986-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20-ஆம் திகதிக்கு முன்னும் (நத்தார் வாழ்த்துக்களையும்) புதுவருட வாழ்த்துக்களை 1986-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னரும் தைப்பொங்கல் வாழ்த்துக்களை 1987-ஆம் ஆண்டு தை மாதம் 10-ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பவேண்டும்.

ஆனால் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள் வாழ்த்துக்களை மூவருக்கு மட்டுமே தெரிவிக்கலாம். அத்துடன் (3) மூன்று தோலகட்டி நெல்லிரச லேபல்களை (நெல்லிரச போத்தலில் உள்ள லேபல்) அத்துடன் பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனை அனுப்பினால் மட்டுமே வாழ்த்துக்கள் பிரசுரமாகும். ஒருவர் எத்தனை பேரையும் வாழ்த்தலாம். ஆனால் (3) மூன்று நெல்லிரச லேபல்களுக்கு மூவர் (பெயர், விலாசம்) மட்டுமே வாழ்த்துக் குரியவர், உதாரணத்திற்கு 15(பதினைந்து) பேர்களை வாழ்த்த வேண்டுமாயின் 15 நெல்லிரச லேபல்களை கூப்பனுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஆகவே உங்கள் லேபல்களைச் சேகரித்து பெயர் முகவரியுடன் உடனே அனுப்புங்கள்.

செனித் வாழ்த்துக் கூப்பன்

பெயர்: ____________

விலாசம்: ____________

வாழ்த்துக்குரியவரின் பெயர், முகவரி

பெயர்: ____________

விலாசம்: ____________

வாழ்த்து இடம் பெறும் பத்திரிகையின் பெயர்; ____________

உதயன் / ஈழநாடு / ஈழமுரசு

____________
கையொப்பம்.

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக)


அனுப்ப வேண்டிய முகவரி:-

செனித் புதுமை வாழ்த்துக்கள்
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

செனித் புதுமையின் உறைவிடம்

விளம்பர வடிவமைப்பு: ஜோ. [illegible]





இலவசம்
ஒவ்வொரு வீடெம் போத்தலுடனும் கொள்கலனுடனும் 1/2 அவு, 1 அவு அளக்கக்கூடிய அளவை மாணி

ரெட் ஸ்டார்

# வீடெம்

600 சக 400

(எம். சி. பீ. ஏ 60% சக 40%)
ரெட் ஸ்டார் வீடெம் 600 சக 400 நெற்பயிருடன் போட்டியிட்டு வளரும் அகன்ற இலைகளாகிய கிடச்சி, புளியாரி, நீர்கோவா ஆகியவற்றையும் சிறுகோரை, சந்தணகோரை, பன் ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும். நெல் விதைத்து 21 நாட்களுக்கும் 42 நாட்களுக்கு மிடையில் தெளித்தால் சிறந்த பலனடையலாம்.

வீடெம் 400 ரூ 41/50ம் அதற்குமேலும்
வீடெம் 600 ரூ 19/50ம் அதற்குமேலும்

எச்சரிக்கை!- எல்லா பீடை நாசினிகளும் அபாயகர மானவை கவனமாக கையாளவும்.

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்ரட் வங்கி கட்டிடம், கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அவர் தந்த அதிர்ச்சி

எனக்குச் சின்ன வயதிலிருந்தே சுறுசுறுப்பாக இருந்துதான் பழக்கம். முதல்முறை எஸ். எஸ். ஸி பரீட்சையில் ஐந்து பாடங்களில் தான் சித்தியடைந்தேன்.

தொடர்ந்தும் படித்து அடுத்த தடவையும் பரீட்சை எடுக்க நான் ஆசைப்பட்டது உண்மைதான். ஆனால் என் குடும்பத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தபோது பூதாகரமான முறையில் பிரச்சினைகள் கண் முன் நின்றன.

குடும்பத்தில் ஒட்டாத எந்த வருமானமுமற்ற தந்தை, அடிக்கடி ஹிஸ்டீறியா வந்து படுக்கையில் படுத்து விடுகின்ற தாய், இளையவளான தங்கைச்சி.

இந்த நிலையில் தொடர்ந்தும் எப்படிப் படிக்க முடியும்?

ஓரிரு சந்தர்ப்பங்களில் இதைப்பற்றி அப்பாவிடம் பேச்சு எடுத்தபோதும் அவர் ஏதோ காது கேளாதவரைப் போல அதைத் தட்டிக் கழித்ததிலிருந்து நான் தொடர்ந்து படிப்பதை அவர் விரும்பவில்லை என்று கணிக்க முடிந்தது.

அதுவுமில்லாமல் படிப்பு, படிப்பு என்று படித்துத்தான் அப்படி என்ன அள்ளிக் கொட்டப் போகின்றாய்? என்ற அம்மாவின் நச்சரிப்பு வேறு.

இதனால் தான் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆசையின் வேர் கருகியது. ஆனாலும் இந்தச் ஸ்ரீதரன் மாஸ்டர் தொடர்ந்தும் படிக்கும்படி வற்புறுத்தியதால் சில சமயம் மனது சலனப்பட்டதென்னவோ உண்மைதான்.

ஆனால் எங்கள் நிலையைச் சீர்தூக்கி ஆராய்ந்து கடைசியில் நான் கண்ட முடிவு—

என் படிப்பை அத்தோடு கைவிடுவதென்பது தான். ஆசையும் ஓரளவு திறமையும் இருந்தும் சூழ்நிலைக்கும், வசதிக்கும் ஏற்ப நடக்க நினைத்தேன். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் ஸ்ரீதரன் மாஸ்டர் சொன்னது மாதிரி தொடர்ந்து படித்து எஸ். எஸ். ஸியை யாவது பாஸ் பண்ணியிருந்தால் இன்றைக்கு ஏதாவது ஒருவேலைக்குச் செல்ல முயற்சி செய்யலாம்.


நான் மாமா, மாமியுடன் இருக்காமல் இங்கு வந்து விட்டது அப்பாவுக்கு ஏற்கனவே பிடிக்கவில்லை. அவரைக்

### அத்தியாயம் மூன்று

குறை சொல்லி என்ன பயன்? குடும்பச் சுமையைத் தாங்கமுடியாமல் திணறுகிறார் அவர். இந்த நிலையில் நானும் என் மகனும் அவருக்கு மேலதிகப் பாரம்தானே? அம்மாவோ இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரி... நான் தன்னிடம் திரும்பி வந்து விட்டது அவளுக்கு ஒரு பக்கம் மனத்திருப்தியைக் கொடுத்தாலும் மறுபக்கம் இந்த வயதில் வாழாவெட்டியாக வாழ்க்கையை முடித்துக் கொண்டு வந்து விட்டாளே என்ற மனக் கஷ்டம்.

யாரை யார் நோவது? எனக்கு இப்படி வீட்டில் ஒரேயடியாக அடைபட்டுக் கிடப்பது மனதுக்குப் பெரிய கஷ்டமாக இருந்தது. அது மட்டுமில்லாமல் மற்றவர்கள் என்னைப் பார்க்கும்போது ஏதோ ஓர் அனுதாபத்தோடு பார்ப்பதாக பாவனை பண்ணிக் கொள்ளும்போது என்னுள் ஒரு பக்கம் ஆத்திரமும் பொங்கி எழுந்தது. என் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்ற கேள்வி என் முன் பூதாகரமாக உருவெடுத்து நின்றது.

கணவனை இழந்து விட்டேன் என்பதற்காக நான் தற்கொலை முயற்சியில் இறங்கி விடுவேன் என்று ஸ்ரீதரன் மாஸ்டர் எண்ணுகிறாரே என்பதை நினைக்க எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.




என் குடும்ப வாழ்க்கை சுவையானதாக அமையவில்லை என்பது உண்மைதான். என் அவர் எவ்வளவுதான் பழக்க வழக்கங்களில் நல்லவராக இருந்தபோதும் எப்போதும் சந்தேகப் பிராணியாகவே இருந்தார். அது தவிர அவரின் பெற்றோரின் போக்கு எனக்கு விசித்திரமாயிருந்தது. சொத்து சுகம், வசதியான வாழ்வு, இப்படியாக வாழ்ந்து விட்டதாலோ என்னவோ அவர்களுக்கு மருமகளான எனக்கு சாதாரணமாகக் கொடுக்கவேண்டிய சுதந்திரத்தையும், கௌரவத்தையும். அன்பையும் கொடுத்து அன்போடு அரவணைத்து நடத்துகிற மனநிலை இருக்கவில்லை.

மாடுகள் சந்தையில் விலைக்கு வாங்கிய மாட்டை எந்த நிலையில் வைத்து கணிப்பார்களோ அந்த நிலைதான் எனக்கு என் மாமன், மாமியாரின் மனங்களில் கிடைத்தது. இவை யெல்லாவற்றையும் அந்த வீட்டிற்குச் சென்ற சில நாட்களிலேயே புரிந்துகொண்டு வேதனைப்பட்டேன்.

என் அவரோ தாய் தந்தையருக்கு அடங்கிய 'பிள்ளை' ஒரே பிள்ளை என்பதால் சின்ன வயதிலிருந்தே அவரது சுதந்திர எண்ணங்களையும் நடத்தைகளையும் அடக்கி கட்டுப்படுத்தி எதற்கெடுத்தாலும் 'ஆம் அப்பா' போடுகிற நிலையில் அவரை உருவாக்கி விட்டிருந்தார் என் மாமனார் இந்த நிலையில் நான் என்ன செய்ய முடியும்? நான் பெண்.

விலைக்கு வாங்கிய மாட்டிற்கு அவர்களா பார்த்து இரக்கம் காட்டினால்தான் உண்டு பசித்தபோது வைக்கோலும், தாகம் எடுத்தால் தண்ணீரும் அவர்களாகப் பார்த்து இட்டால்தான் உண்டு.

> ...மற்றவர்கள் என்னைப் பார்க்கும் போது ஏதோ ஓர் அனுதாபத்தோடு பார்ப்பதாகப் பாவனை பண்ணிக் கொள்ளும் செயல்..

அந்த நிலையில்தான் நான் இருந்தேன்.

என் நிலையை யாரிடம் சொல்லி அழமுடியும்? மாமனார் மாமியாரின் அட்டகாசங்களையும் அவமதிப்புகளையும் இரவில் அவரிடம் தனிமையில் சொல்லி அழுதால் அவர் ஏன் ஊமையாகி விடுகிறார்? நான் பெண் என்பதால் ஓர் அளவுக்குத்தானே அவமதிப்புகளைத் தாங்கிக் கொள்ளமுடியும்!

எத்தனையோ இரவுகள் என் தலைவிதியை எண்ணிக் கண்ணீர் வடித்திருக்கிறேன். திருமணமான புதிதில் அனுபவமில்லாத இளம்பெண் என்றுகூட இரக்கமில்லாமல் என்னைப்பற்றி என் கணவரிடம் கோள் சொல்லிய மாமனாரையும்மாமியாரையும்வயது போனவர்கள்; பாவம், என்று மன்னித்து விடலாம். ஆனால் அவர்கள் சொன்னதெல்லாவற்றையும் நம்பி, என்னோடு சீறிச் சினந்து, என்னைச் சந்தேகக் கண்களோடு என்றைக்கு என் கணவர் நோக்க ஆரம்பித்தாரோ அன்றைக்கே நான் என் வாழ்க்கை முடிந்துவிட்டதாக உணரத் தொடங்கி விட்டேன்.

சின்ன வயதிலிருந்தே எனக்குக் கடவுள் பக்தி அதிகம் கஷ்டப்படுபவர்கள் தம் கஷ்டங்களை நிவர்த்திக்கும்படி நம்பிக்கையுடன் கடவுளை வேண்டிக் கொள்வது வழக்கம். அந்த நேரத்தில் இறைவனைத் தவிர என் நிலையைச் சொல்லி அழ எனக்கு யாருமே இருக்கவில்லை என் கணவரின் போக்கை மாற்றி, மாமன் மாமியின் குணத்தை மாற்றி எனக்கு நிம்மதியான அமைதியான வாழ்வைத் தா என்று ஆண்டவனை ஒவ்வொரு நாளும் வேண்டி வந்தேன்

அப்படியான வாழ்வு எனக்கு சிறை வாழ்க்கை போல இருந்தது நான் எனது நிம்மதியையும் சந்தோஷத்தையும் இழந்து நடைப்பிணமாக அந்த வீட்டில் காலம் தள்ளினேன் என் மகன் கண்ணன் மட்டும் பிறக்காமலிருந்திருந்தால் ஒருவேளை அந்த நரக வாழ்க்கையில் விரக்தியுற்று தற்கொலைக்குக்கூடத் துணிந்திருப்பேன்.

பெண்ணுக்கு அளவுக்கு மீறிய அழகும் ஆபத்துதான். நான் இயற்கையாகவே அழகி என்று புகழப்பட்டவள் இந்தநிலையில் ஒரு கணவனுக்குத் தன் மனைவியின்மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் எப்படி அப்பெண்ணால் வாழ்க்கையில் அமைதியாக வாழமுடியும். நான் எப்போதுமே கலகலப்பாகப் பழகுகிற சுபாவம் மிக்கவள். அந்தச் சுபாவத்தினால்தான் நான் வீட்டிற்கு வருகிற அறிந்தவர்கள், அறியாதவர்கள் யாராயிருந்தாலும் சிரித்து பேசிப்பழகி வந்தேன்.

அது என் கணவனின் பார்வையில் இப்படி ஏன் சந்தேகவித்தை விதைக்க வேண்டும். உண்மையில் எனக்கு நன்றாகத் தெரியும் இப்படி ஓர் அபாண்டத்தை என்மீது கொஞ்சம்கூட இரக்கமில்லாமல் சுமத்தியவர்கள் என் மாமாவும் மாமியும் தான் இதனை எப்படி நான் வெளியே சொல்ல முடியும்

என்னுடைய வேண்டுகோளுக்கு இரங்கிய ஆண்டவன் உன் துயரங்களுக்கு இது ஒன்றுதான் விடுதலை தரக்கூடும்' என்று சொல்வது போலவோ என்னவோ இப்படி ஒரு வழியில் எனக்கு அந்த நரக வாழ்க்கையிலிருந்து விடுதலை அளித்திருக்கிறார்

இப்போது எனக்கு விடுதலை கிடைத்து விட்டாலும் என்னுடைய அப்பாவுக்கோ அம்மாவுக்கோ பாரமாக இருக்க என் மனம் இடம் கொடுக்க மறுக்கிறது. இனி நான் ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கித்தானாக வேண்டும். அதற்கு இடையூறு என் அரைகுறைப்படிப்பு. படிப்பில்லாமல் என்னால் என்ன தொழில் செய்ய முடியும்? என்னுள்ளேயே நான் தடுமாறிக் கொண்டிருந்தபோது தான் ஒரு நாள் தற்செயலாக என்னோடு படித்த மஞ்சுளாவைச் சந்திக்க நேர்ந்தது

அவள் என் நிலைக்காக வருத்தப்பட்டாள். தேறுதல் கூறினாள்: அவள் இப்போது ஒரு தாதி நிலையத்தில் சேவை செய்து சம்பாதிக்கிறாள். பாவம்; வயதான தாயாரையும் காப்பாற்றித் தன் ஜீவனையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிற கன்னிப் பெண் அவள் வேறு என்ன செய்வாள்?

ஆனால் அவளைப் பார்த்தபோது அவள் மிக வும் சந்தோஷமாக இருப்பதாகவே எனக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காலத்தை ஒழுங்காக பிடித்தால் வருவது அதிஷ்டம்!

காலங்கள் கடவுள் பாடும் ராகங்கள். அவை விணடிக்கப்பட்டு விட்டால் திரும்பக்கிடைப்பதில்லை

ஒரு வருஷம் முடிகிறது என்றால் ஒரு வயது முடிகிறது என்று பொருள்.

வயதுக்கு ஏறுகிற சக்தி உண்டே தவிர இறங்குகிற சக்தி கிடையாது.

எத்தனை வயது வரை ஒருவன் வாழ்ந்தான் என்பது கேள்வியல்ல; ஒவ்வொரு வயதிலும் அவன் என்ன செய்தான் என்பதே கேள்வி.

மராட்டிய வீரன் சிவாஜியின் வயதைப் பற்றி யார் கவலைப்பட்டார்கள்! அவன் நடத்திய வீர சாகஸங்களே வரலாறுயின.

வயதுகள் கூடலாம்; குறையலாம்; ஆனால் ஓடுகிற வருஷங்கள் உருப்படியான வருஷங்களாக இருக்க வேண்டும்.

இன்ன ஆண்டில் இன்ன காரியம் நடந்தது என்று வரலாறு எழுதப்படுமானால் அந்த வரலாற்றில் எங்காவது ஒரு மூலையில் நம்முடைய பெயர் இருக்க வேண்டும்.

எந்தக் காரியத்தை எந்தக் காலத்தில் செய்ய வேண்டுமோ அந்தக் காலத்தில் செய்து விட வேண்டும்.

அறிவும் உணர்ச்சியும் தாமதித்தே வருகின்றன.

ஆனால் காலம் முந்திக் கொண்டு விடுகின்றது.

இருபது வருஷங்களுக்கு முன்பு குமரியாக இருந்தவள் இப்பொழுது கிழவியாகக் காட்சியளிக்கிறாள்.

அப்போது அவளுக்காக ஏங்கிய ஆடவர்களும் இப்போது அவளிடம் ஆத்ம விசாரம் தான் பேசமுடிகிறது

மலர் பூத்தவுடனேயே அது கூந்தலுக்குப்போகா விட்டால் அது வாடிய வுடனேயே காலடியில் விழத்தான் வேண்டியிருக்கும்

குருக்ஷேத்ரம் எப்போது நடந்தது? பாண்டவர்கள் வனவாசம் முடிந்த பின்பு. அதற்கு முன்னாலேயே கண்ணன் அந்தப் போரைத் துவக்கியிருக்கலாம். ஆனால் அந்தக்காலம் யுத்த தர்மத்திற்கு நியாயமான காலமாக இருக்காது.

இரண்டாவது உலக யுத்தத்தை ஹிட்லர் தொடங்கிய காலம் அற்புதமான காலம்.

அவன் திட்டம் ஒழுங்காக இருந்திருக்குமானால் அவனே உலகத்தின் ராஜா!

பங்களாதேசத்துக்குள் இந்தியா புகுந்த காலமே அருமையான காலம் அதற்கு முந்தியிருந்தால் உலகின் வசை இருந்திருக்கும். பிந்தியிருந்தால் இந்திய பொருளாதாரம் நாசமாகி இருக்கும்.

இளம் பருவத்தில் பைரன் ஓர் இளம் பெண்ணைக் காதலித்தார்; அவள் மறுத்து விட்டாள்.

நாற்பது வயதுக்குமேல் அவளே அவரைத் தேடி வந்தாள், ஆசையோடு; அவர் மறுத்து விட்டார்

அரசாங்க வேலையில் சேர்வதற்கு குறிப்பிட்ட வயதை நிர்ணயிக்கின்றார்கள் அந்த வயது கடப்பதற்கு முன்னாலேயே அதில் சேர்ந்து விடவேண்டும். காலம் போய்விட்டால் பிறகு கடைகளில் தான் வேலை பார்க்கவேண்டி வரும்.

காலத்தின் பெருமை உணர்ந்தவன் தான் காரியத்திலும் பெருமை கொள்ள முடியும்.

நம்முடைய நண்பர்களும் காலங்களே, பல

( 6ஆம் பக்கம் பார்க்க)

கண்ணதாசன்

## ஞான சஞ்சீவி

### பரப்பிரம்மம்

அங்கு இங்கு எனாதபடி நீக்கமற பிரபஞ்சம் எங்கும் மறைநுட்பமாக இருந்து கொண்டு முழு இயக்கத்துக்கும் ஜீவ கோடிகளுக்கும் மூலாதாரமாக இருப்பதுவே பிரம்மம்

முழுமுதற் பொருளாகிய பிரம்மத்தை தெய்வ மனம் என்றும், தெய்விக உணர்வு நிலை என்றும், பிரபஞ்ச உணர்வுநிலை என்றும், சுத்த சைதன்யம் என்றும் பரமேஸ்வரன் என்றும் வர்ணிக்கப்படுகிறது.

பிரம்மம் ஆதியும் அந்தமும் இல்லாதது. எவ்வித மாற்றங்களுக்கும் உட்படாதது கால, தேச, காரண காரிய தொடர்புகளுக்கு அப்பாற்பட்டது.

பல்வேறு மாற்றங்களுக்கும் திரிபுகளுக்கும் உட்பட்டுக் கொண்டிருப்பது பிரபஞ்சம். அதற்கு இருப்பிடமாக உள்ளது பிரம்மம் ஆனால் அது அசைவதில்லை. அண்டத்திலுள்ள சகலதும் அதிர்வு பெறுகிறது. அதிர்வுகளின்றி இயக்கமில்லை ஆனால் பிரம்மம் சலனமற்று இருக்கின்றது.

பிரம்மத்தை தோன்றிய நிலை, தோன்றாத நிலை என்ற இருநிலைகளில் வேதங்கள் விளக்குகின்றன பிரம்மம் பிரபஞ்ச சொரூபமாக வெளிப்படும் பொழுது முக்குணங்களோடு தொடர்புபட்டு சகுண பிரம்மமாக பரிணமிக்கிறது இந்நிலையை 'சத்' என்று சொல்ல படுகிறது

(6 ஆம் பக்கம் பார்க்க)

அ- குமரகுரு

அரசோலோ குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளார்

நெற்பயிரைத்தாக்கும் குதிரைவாற் புல், மொண்டி, மாருத்து, கோழிச்சூடன் ஆகியகளைகளும் அவற்றின் விதைகளும் அகால மரணத்துக் குள்ளாகி இருக்கின்றன. இவர்களின் மரண பரிசோதனையின் போது இதற்குக் காரணம் அரசோலோ வென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரசோலோ அங்லோ-ஏஷியன் பேர்டிலைசர்ஸ் ஸ்தாபனத்திஞல் சந்தைப்படுத்தப்படும் ஓர் நவீன களை கொல்லி. எல்லா பீடைநாசினிகளும் அபாயகர மானவை கவனமாகக் கையாளவும். (தகவல் தந்தவர் ஸ்ரோபர் தகவற் பகுதி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளங்கியும், விளங்காமலும்

## அட்சரம் தவறாது எழுதியவை

தமிழிலக்கிய வரலாற்றிலே சங்கப்பலகை யேறிய புலவர்கள் வரிசையிலே பொய்யடிமை யில்லாப் புலவர்கள் கூட்டத்திலே தோலாநாவினராய கபிலர் என்பாரும் பரணர் என்பாரும் மிக நெருக்கமாக வாழ்ந்தமையாலும், ஒரே மாதிரியாகச் சிந்திதமையாலும் கபிலபரணர் எனப் புலவர்கள் மதிக்க வாழ்ந்தவர்கள்.

இடைக்காலத்திலே

கண்ணீரோடு கண்ணீராக அவர் பிரிவு வேதனையைக் குறித்துப் பாடியதும் உண்டு.

### விளங்கியும் விளங்காமலும்

தம்மிலும் பார்க்க மூவாண்டுகள் இளையவராய கைலாசபதி அவர்களை அந்த நாள் தொடக்கம் பண்டிதமணி அவர்கள் ஒருவகை அச்சத்தோடும் அன்போடும் பண்போடும் அவரோடு பழகத் தொடங்

இப் பழகி நாலைந்து களுள் அவரை ஒரு மகான் எனக் கண்டார் கண்டவர் தாம்கொண்ட கருத்தினையும் தம்மை உருவாக்கிய மனிச்சர் ஐயா ஸ்ரீமத் கைலாச

செல்வரா. அங்கே 1923 இல் உயர்தர விஞ்ஞான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வகுப்பிற் சேர்ந்து படிக்கும் பொருட்டு. குறிப்பிட்ட குறிக்கோள் மந்தி

**க. சி. குலரத்தினம்**

பிள்ளை அவர்களுக்கு 1934 ஆம் ஆண்டிலே எழுதினர்.

'சைவசித்தாந்தம் விளங்கிய இருவர் இப்

## கூடிப்பிறவா இரட்டை விவேகியர்

யும் இரட்டையர் பலர் தமிழ் வளர் தலையும் அறியக் கிடக்கின்றது. இந்த வரிசையில் முதசூரியர், இளஞ்சூரியர் என்னும் இருவர் கூடிப்பிறந்தவராயும் இருந்தார்கள். அண்மைக் காலத்தில் சைவாசிரியகலாசாலையில் உப அதிபர் கைலாசபதி அவர்களும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும் கூடிப்பிறவா இரட்டையராகவே இருந்து ஆசிரியர்களை உருவாக்கித் தமிழ் வளர்த்தார்கள்.

பண்டிதமணி அவர்கள் 1930 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை இருபத்தேழு ஆண்டுகள் கைலாசபதி அவர்களோடு ஒன்றாகவே சேவை செய்து நெருக்கமாக வாழ்ந்தவர். கைலாசபதி அவர்கள் 1957 ஆம் ஆண்டில் சுப ஒய்வு பெற்ற 1961 ஆம் ஆண்டில் மறையும்வரை இயன்றளவு அவரோடு தொடர்பு கொண்டிருந்தாரோடு, அவர் மறைந்ததைக் கேட்டு மனமுருகிக் கண்ணீர் வடித்ததும் உண்டு.

கினார்.

அவரோடு உரையாடுவதில் தனியின்பம் கண்ட பண்டிதமணி அவர்கள், அவரின் கருத்துக்களுக்குத் தனிமதிப்புக் கொடுத்து அடக்கமாயிருந்தார் அவர் சவ்வப்போது கூறியவற்றை உடனுக்குடன் அவருக்கு முன்பாகவே குறித்துக்

பொழுது யாழ்ப்பாணத்திலே இருக்கிறார்கள். அவர்களே ஆறுமுகநாவலரையாவைப்பறிய வல்லவர்கள் அவர்களிலொருவர் சைவாசிரியகலாசாலை உப அதிபர் பொ. கைலாசபதி அவர்கள். அவர்கள் மனித உருவில் ஒரு தெய்வம்'

பண்டிதமணி அவர்கள்

### பண்டிதமணி வரலாறும் காலமும்

கொள்ளுதல் ஆசாரக் குறைவெனக் கருதி வேறு வேளைகளில் அட்சரம் தவறாமல் எழுதிக்குவித்து வைத்திருந்தார்

இவை என்ன என்று ஒரு சமயம் மாணவர்கள் கேட்டபோது அவர் சொன்ன பதில் விளங்கியும் விளங்காமலும் எழுதியவை''. கைலாசபதி அவர்கள் சொன்னவற்றில் பண்டிதமணி அவர்கள் விளங்க முடியாது வைத்தவை யாருக்குத்தான் விளங்குமோ யாரறிவார்?

பண்டிதமணி அவர்கள் பெரியவரோடு நெருங்

தாம் வெளியிடும் நூல்களிலும், தமக்குக் கிடைத்த பாராட்டு விழாக்களிலும் தம் சிந்தனையைத் தூண்டிய கைலாசபதி அவர்களைப் பற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை. அண்மையில் தமக்குக் கிடைத்த கலாநிதிப் பட்ட மணிப்புவிழாவில் பதிலுரையின்போது குறிப்பிட்டவை அறிந்து இன்புற வேண்டியவை.

### மகா புனிதர்

'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்னும் மந்திரத்தோடு தோன்றியது பர

ரத்துக்கு நல்ல உதாரணம் என்று சொல்லத்தக்க ஒருவர் வந்து சேர்ந்தார் அவரே அந்த மகா புனிதர்.

அவரை இங்கே என் கண்கள் நிறையக் கண்டேன். 'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்கின்ற அனுமான் கூற்று நினைவுக்கு வருகின்றது

அவர் நாதனமான ஒரு பிறவி அவரது தோற்றம் பிரத்தியேகமானது. உயரம் அகஸ்தியரை நினைவூட்டுவது மிக மிக மிருதுவான தேகம். எண்ணத்தக்க சில மயிர்களாலான குடுமி. மிக்க தேஜஸ்— ஆழ்ந்த சிந்தனை இவை ஒருவாறு குறிப்பிடத்தக்கவை'

இங்ஙனம் தமது சிந்தனையைத் தூண்டிய அதிமனிதரிடம் தாம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளவும், தாம் அவருக்குத் தொல்காப்பியம் கற்றுக் கொடுக்கவும் உடன்பட்டு, இருவரும் ஒரு சனிக்கிழமை கீரிமலைக்குச் சென்றார்கள். அங்கே நீராடிய பின் கொண்டு சென்ற ஏடுச்சாதத்தை உண்டபின் படிக்கத் தொடங்கினார்கள்.

### தயங்கினர்

முதலின் பண்டிதமணி அவர்கள் தொல்காப்பியம் சொல்லத் தொடங்கி (7 ஆம் பக்கம் பார்க்க)

# நீரில் காதைக் கழுவிய யானைக்கு நோவு பறந்தது

பெரிய யானையின் தலை நிமிர்ந்திருந்தது. அதன் காதுகள் சிலிர்த்திருந்தன அதன் பெரிய பாதங்களை அந்த யானை நிலத்தில் அடித்தது. யானை பயங்கரமான ஒலியில் பிளிறியது.

சிங்கம் கிழட்டு யானையின் தந்தங்களுக்கு அகப்படாமல் காட்டுக்குள் தப்பி ஓடியது.

இராட்சதயானை திரும்பிப் பார்த்தது. சமவெளியில் அவை கண்ட அதே கிழட்டு ஆண் யானைதான்.

''ஆ நீங்களா? ஏன் தனியே வந்தீர்கள். ஒரு சிங்கம் குட்டியானையைக் கொன்றுவிடும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று அது பிளிறிக் கேட்டது

''ஆம். ஆனால் நாம் முன்னர் சிங்கத்துடன் சண்டையிட்டதில்லை''

ஐயோ! எவ்வளவு நோகின்றது.

''சரி, என்னுடன் வாருங்கள்'' முரட்டு கிழட்டு யானை கூறியது.

இரண்டு குட்டி யானைகளும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு அதற்குப் பின்னால் சென்றன.

குளிர்மையான நீரூற்று ஒன்றில் காதைக் கழுவ அது காட்டிக் கொடுத்தது. அப்பொழுது அதன் நோவு குறைந்தது.

''இப்பொழுது சொல்லுங்கள். கூட்டத்தை விட்டு ஏன் விலகினீர்




என்று பயங்கொண்ட இரண்டு குட்டி யானைகளும் கூறின.

''உண்மைதான். ஒரு சிங்கம் முழுதான யானைக் கூட்டத்தைக் கண்டு அஞ்சுகின்றது. ஆனால் சிறிய பால்வடியும் தந்தங்கள் உடைய உங்களைப்போன்ற இரண்டு பிஞ்சுக் குட்டி யானைகளுக்கு அஞ்சாது'' என்று வயதேறிய யானை கூறியது.

அப்பொழுது முதலாவது குட்டியானை தலையைச் சரித்து முனகியது. ''என்ன சமாசாரம்'' என்று முதிய யானை வினவியது.

''என்னுடைய காது. ஏதோ ஒரு பொருள் காற்றில் ''விர்'' என்று பறந்து வந்து காதைத் தாக்கியது. இப்பொழுது காதில் ஒரு துவாரம் இருக்கின்றது.

கள்'' என்று அது கேட்டது.

''நாங்கள் நினைத்தோம் நாங்கள் வளர்ந்து விட்டோம் என்று. நாங்களே ஒரு கூட்டம் என்று நினைத்துக்கொண்டோம்'' என்று இரண்டு குட்டியானைகளும் கூறின.

''நீங்களே ஒரு கூட்டமா? நான் உங்களிலும் பார்க்க அதிக மடங்கு வயது கூடுதலானவன். நான்கூட ஒரு கூட்ட

## கூட்டத்தைப் பிரிந்த குட்டி யானைகள் (பகுதி: III)

மளவு பலமானவன் அல்ல. உங்கள் கூட்டம் உங்களுக்கு உதவி செய்கின்றது ஆபத்து வரும் பொழுது அது எச்சரிக்கை கொடுக்கின்றது நீங்களும் கூட்டத்தில் இருப்பதால் கூட்டம் பலம்

பெறுகின்றது'' என்று கண்டிப்பாகக் கூறியது யானை.

''எங்களால் கூட்டம் பலம் பெறுகிறதா? இரண்டு குட்டி யானைகளும் வினவின

''ஆம், ஒவ்வொருவரும் கூட்டத்தைப் பல

**வீ. சின்னத்தம்பி**

மாக்குகின்றனர். அதனாற்தான் கூட்டம் ஒன்றாக இருக்கின்றது''.

''இப்பொழுது எமது கூட்டம் நகர்ந்துகொண்டிருக்கிறது. அவைஎங்கே என்று கூட எமக்குத் தெரியாது''என்று குட்டி யானைகளும் கூறின.

''அப்படிப்பட்ட நீங்கள், தனியாகக் கூட்டமாக இருக்கத் தகைமை உடையவர்கள் என்று நினைத்தீர்களா? என்னுடன் வாருங்கள்.

அவை எங்கே என்று எனக்குத் தெரியும். எங்களுக்கு அதிஷ்டம் இருந்தால் அவை போவதற்கு முன் நாம் அவற்றைக் காண்போம்'' என்று அந்த ஆண்யானை கூறியது.

பின்னர் அது சந்தடி செய்யாமல் பாதையில் நடந்து சென்றது. இளந்தென்றல் காற்று இலைகளை வருடிச் செல்வது போன்ற அமைதியான 'ஸ் ஸ்' சத்தம்தான்கேட்டது.

இரண்டு குட்டி யானைகளும் அதற்குப் பின்னால் சென்றன.

விரைவில் உலகின் அந்தத்துக்கே வந்துவிட்டதுபோல் அவற்றுக்குத் தோன்றியது. அவற்றுக்கு முன்னால் பாதை கிடையாது. காடு கிடையாது. காலியான வெளிதான் காணப்பட்டது. அந்தக் காலி இடத்தை அடைந்தபோது அது காலி இடமல்ல, ஒரு பெரும் நதி என்று தெரிய வந்தது.

அந்த நதி மிகவும் விசாலமாக இருந்தது. ''உலகில் இத்தகைய விசாலமான நதி இருக்கின்றது என்பது எமக்குத் தெரியாது'' ஒன்றை ஒன்று பார்த்து இரண்டு குட்டி யானைகளும் கூறின.

காண்டா மிருகம் ஒன்று நீரில் மிதந்து கொண்டிருந்தது, முதுகில் அதன் குட்டி சவாரி செய்தது. மணலில் சிறிய பல்லிகள் வெயில் காய்ந்து கொண்டிருந்தன. ஒரு கூட்டம் கிளிகள் மரங்களில் இருந்தன. எல்லாம் அமைதியாக இருந்தது.

''எமது யானைக் கூட்டம் இந்த நதியைக் கடக்கும் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்'' இரண்டு குட்டி யானைகளும் கேட்டன.

(வளரும்)

### கண்டுபிடித்தவர் யார்?

1. ஆர்மோனியம்
2. புகைப்படக்கருவி
3. குடை, 4. அச்சுயந்திரம், 5. சைக்கிள்

**விடை**

1. பெஞ்சமின் பிராங்ளின், 2. ஜோர்ஜ் ஈஸ்ட்மன், 3. ஜோனஸ் ஹனவே, 4. குற்றன் பேர்க், 5. பிளாக்சர்,

விஜிதா கனகராசா (யாழ். இந்து மகளிர்)

# நிழலும் நிஜமும்...

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

குப்பட்டது அன்றைக்கு இரவுதான் நானும் ஏன் நெசவு நிலையத்திற்கு போகக்கூடாது? என்றதொரு எண்ணம் மனதில் எழுந்தது. இப்படியே வீட்டில் அடைபட்டுக் கிடப்பதிலும் பார்க்க நெசவு நிலையத்தில் வேலை செய்தால் மனதுக்கும் ஒரு நிம்மதி. அதுவுமில்லாமல் பெற்றோருக்குப் பாரமில்லாமல் என் மகனை நானே உழைத்துக் காப்பாற்றுகிறேன் என்றதொரு திருப்தியும் ஏற்பட இடமுண்டல்லவா?

அடுத்தநாள் என் எண்ணத்தை அம்மாவின் மூலம் அப்பாவுக்குத் தெரியப்படுத்துகிறேன். முதலில் மறுத்தாலும், எனது வேண்டுதல்களுக்குப் பிறகு அரைமனதோடு சம்மதம் தந்தார்.

திருமணமானபோது என் வாழ்வின் முதல் அத்தியாயம் முடிந்து இரண்டாம் அத்தியாயம் ஆரம்பித்தது என் கணவரை இழந்து இந்த வீட்டிற்கு வந்த வரையில் இரண்டாம் அத்தியாயமாகி, இன்றைக்கு நான் தனி பொருத்தியாக உலகத்தின் சவாலை ஏற்ற என்னையும் என் மகனையும் வாழவைக்கிற முயற்சியின் ஆரம்பமாக வேலைக்குப் போகிற மூன்றாவது அத்தியாயம் ஆரம்பமாகிறது

என் வாழ்வின் முதலிரண்டு அத்தியாயங்களிலும் நான் நிம்மதியாக வாழ்ந்ததில்லை. இனியாவது, இந்த மூன்றாம் அத்தியாயத்திலாவது எனக்குக் கவலைகளையும், தொல்லைகளையும் தராத நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடு என்று ஆண்டவனை வணங்கிக்கொண்டு நெசவு நிலையத்திற்குப் புறப்பட்டேன்.

நெசவு நிலைய அதிபர் பூரணம் அம்மையார் தனக்காக வாழாமல் உண்மையில் பிறருக்காக வாழுகின்ற சமூகசேவகி. சமூக சேவையென்ற போர்வையில் நாட்டைச் சுறையாடித் தம் வயிறு வளர்க்கின்ற புண்ணியவான்கள் வாழுகின்ற இந்த நாளில் பூரணம் அம்மையாரைப்போன்று குடத்து விளக்கத் தம்பணி செய்பவர்கள் ஒரு சிலரே.

வாழ்க்கையில் தோல்விகள் பலவற்றைக் கண்டும் கணவனை விபத்தில் பறிகொடுத்தும் சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்த அம்மையார் என் கதையைக் கேட்டு மனம் உருகினார்.

நெசவு வேலையைப் பழகும்படி அன்போடு புத்திமதி கூறினார். அடுத்த நாள் தொடக்கம் எனக்கு வேலை பழக வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததோடு, வேலையைப் பழகும் வரை ஊதியமும் அளிப்பதாக அவர் கூறியபோது என் மனத்தின் பாரம் குறைந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது

அடுத்த நாட்காலையில் ஏதோ அரசாங்க உத்தியோகம் ஏற்கப் போகிறவளைப் போல உற்சாகத்தோடு புறப்பட்டேன்.

என் உற்சாகமெல்லாம் வழியில் ஸ்ரீதரன் மாஸ்டரைச் சந்திக்கும் வரையில் தான். நான் அவசரமாகப் போகும்போது வழியில் ஸ்ரீதரன் மாஸ்டர் எதிர்ப்பட்டார்

'வணக்கம் மாஸ்டர்' என்றேன் கலகலப்பாக.

'இவ்வளவு அதிகாலையில் எங்கே புறப்பட்டுவிட்டாய் சாந்தி' என்றார் மாஸ்டர்.

இவரிடம் இப்போது உண்மையைச் சொல்லலாமா? என்று மனதில் சிறு தயக்கம். எனக்குச் சின்ன வயதிலிருந்தே பொய் சொல்லிப் பழக்கமில்லை. என் தயக்கத்தைப் புரிந்து கொண்டு தானோ என்னவோ 'நான் தவறாகக் கேட்டு விட்டேனா? என்றார்

அவருடைய பெருந்தன்மையை நினைக்க என்னவோ போலிருந்தது

'என்ன மாஸ்டர், இதற்குப் போய் நீங்கள் இப்படியெல்லாம் பேசுகிறீர்களே!' என்றேன். கேள்விக்குறியுடன் என்னை நிமிர்ந்து பார்த்தார்.

'வீட்டில் அடைபட்டுக் கிடக்க என்னவோபோல இருக்கிறது அதாலை நெசவு நிலையத்துக்குப் போவது என்று தீர்மானித்தேன். பொழுது போக்காகவும் இருக்கும். அதோடு அம்மா அப்பாவுக்கும் ஏதோ என்னாலானதைச் செய்கிறன் என்ட திருப்தியும் இருக்குமில்லையா?...'

மாஸ்டர் ஒன்றும் பேசவில்லை. கூடவே நடந்து வந்து கொண்டிருந்தார். ஏதோ ஆழ்ந்த சிந்திக்கிறார் போலத் தென்பட்டது

'என்ன மாஸ்டர், பேச்சையே காணோமே! திடீரென்று எவ்வளவு ஆழ்ந்த யோசனை' என்றேன்

'யோசனையல்ல; தயக்கம்' என்றார் சுருக்கமாக.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது இவர் ஏன் என்னிடம் பேசத் தயங்க வேண்டும் அப்படியென்னவாயிருக்கும் என்று என் மூளைக்கு எட்டவில்லை

'ஏன் என்னிடம் நீங்கள் தயங்க வேண்டும்?'

'அப்புறம் என்னைக் கோபித்துக் கொள்ள மாட்டாயே?' தலையைச் சாய்த்து என்னைப் பார்க்கிறார்.

'நான் ஏன் உங்களைக் கோபிக்கப் போகிறேன். தயங்காமல் சொல்லுங்கள்' என் வார்த்தையில் தடுமாற்றம் தெரிகிறது என்ன சொல்லப் போகிறாரோ என்ற தவிப்பு வேறு

'ஏன் சாந்தி உன் வாழ்க்கையே முடிந்து விட்டதாகத் தீர்மானித்து விட்டாயா?...'

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள் மாஸ்டர்?' நான் தடுமாறிப் போய் விட்டேன்.

'சாந்தி! நீ ஏன் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது?'

மாஸ்டரின் கேள்வி என் காதில் ரீங்காரம் செய்கிறது. நான் மௌனமாகி விடுகிறேன். நான் எதிர்பாராத கேள்வி இது. உடனடியாக என்னால் இதற்கு என்ன சொல்லிவிட முடியும்? அல்ல, இதென்ன இலேசான விடயமா? நினைக்க நினைக்க மனது குழம்புகின்றது.

வீட்டிலிருந்து புறப்படும்போது இருந்த உற்சாகமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடிவிட்டது.

இந்த மாஸ்டர் ஏன் இப்பொழுது என் வழியில் வந்தார்

வந்ததுதான் வந்தார் ஏன் இப்படி ஒரு கேள்வியைப் போட்டு என்னைக் குழப்பினார்.

—ஒரு மாதிரி மாஸ்டரிடம் சொல்லிக்கொண்டு நெசவு நிலையத்தை சென்றடைகின்றேன்.

(வளரும்)


இதோ! அறிமுகப்படுத்துகின்றோம்.

1987 கலண்டர்கள்

எல்லா வகையான அளவுகளில் நீங்கள் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயர், விலாசம் இலவசமாக அச்சிட்டுப் பெறலாம்.

விவரம் அறிய
தொடர்பு கொள்ளுங்கள்:-

ஜோ. எகட்டன்
செனித மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19 / 3 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இது மட்டுமல்ல சகல விதமான டிசைன்கள், Cut Outs, விளம்பர அறிவித்தல்கள், சஞ்சிகைகள் அல்லது மலர்களுக்கு அட்டைப்பட டிசைன்கள் திருமண அழைப்பிதழ்கள் வியூ காட் டிசைன்கள், விளம்பர போஸ்டர்கள், Visiting Cards டிசைன்கள், உங்கள் உற்பத்திப் பொருட்களின் கவர்ச்சிப் பெட்டிகள், சுற்றுத் தாள்கள், டிசைன்கள் எம்மை அணுகுவகள். எமது கலைப்பிரிவு பொறுப்பாளர் திரு பாலாஜி B.Com. அவர்கள் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவார்.

மற்றவர்கள் உறுதியளிப்பதை நாங்கள் முடித்து வைக்கின்றோம்.

செனித்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.


## ஞான சஞ்---

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபஞ்ச விவகாரங்களுடன் தொடர்பற்ற தோன்றுநிலையை 'அசத்' என்றும் 'நிர்குண பிரம்மம்' என்றும் கூறப்படுகிறது தோற்றமும், மாற்றமும், அசைவும் அற்ற இப்பெரும் நிலையிலேயே அது பரப்பிரமம் என்றழைக்கப்படுகிறது.

எல்லா ஜீவராசிகளும், தாவரங்களும், கனிப்பொருள்களும் அவைகளுக்குரிய உணர்வு நிலைகளை பிரம்மத்தின் உணர்வு நிலையிலிருந்தே பெறுகின்றன. அதன் காரணமாக அது தெய்வ மனம் என்றும் பிரபஞ்ச உணர்வு நிலையென்றும் சொல்லப்படுகிறது.

பிரம்மஞானிகள் (Theosophists) தெய்வ மனதில் இருந்து வெளிப்படும் சிந்தனையின் அதிர்வுகளில் இருந்து இயக்கம் பிறக்கிறது என்றும் அவ்வியக்கத்தின் பயனாக ஜீவராசிகளும் சடப்பொருள்களும் உருவாகின்றனவென்றும் கூறுவர்.

இந்துமதம் பரப்பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட புருஷனும் பிரகிருதியும் பிரபஞ்சத்தில் ஜீவராசிகளையும் சடப்பொருள்களையும் தோற்றுவிக்கின்றன என்று கூறுகிறது புருஷன் என்பது சடப்பொருளையும் (matter) பிரகிருதி என்பது சக்தி (Energy) யையும் குறிக்கின்றன.

புருஷன் செயலற்று சலனமற்று இருக்க, பிரகிருதியே சகல இயக்கங்களுக்கும் காரணமாயிருக்கிறது.

பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் பரப்பிரமத்தின் சக்திக்கு விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிக்கும் பாவனைக்கும் ஏற்ப பல பரிமாணங்களைக் கொடுத்து விவரிக்கின்றனர் அணுசக்தி, மின்சக்தி காந்தசக்தி, உந்து சக்தி, இயங்கு சக்தி, ஈர்ப்பு சக்தி என்று எத்தனையோ வகைகள்.

எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம் எப்படி எல்லாமோ பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்து எல்லா விதசக்திகளாகவும் இயங்குகின்றது

சாதாரண மனிதனின் சிற்றறிவுக்கு இந்த உண்மை புரியாது என்ற காரணத்தினால் தான் இந்து சமய ரிஷிகளும், ஞானிகளும், முனிவர்களும் அந்த சக்திக்குப் பல வடிவங்களையும் நாமங்களையும், குணங்களையும் கூறி அதை வழிபடும் நெறிமுறைகளை இந்துக்களுக்கு வகுத்துக் கொடுத்துள்ளனர்.

'அன்னையாய் கண்டவர்க்கு அன்னையாய், தந்தையாய் கண்டவர்க்குத் தந்தையாய், ஆசானாய் கண்டவர்க்கு ஆசானாய் அருவமாய் காண்பவருக்கு அருவமாய், உருவமாய் காண்பவருக்கு உருவமாய், சக்தியாய் சிவமாய், நாராயணனாய், நான்முகனாய், சண்முகனாய், கணபதியாய் நின்று அருள் புரியும் பரம்பொருள் ஒன்றே' என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

அந்தப் பரப்பிரம்மமே எல்லா மதத்தினருக்கும் எல்லா இனத்தவருக்கும் எல்லா ஜீவராசிகளுக்கும் தலைவனான இறைவன்.

## காலத்தை ஒழுங்காக---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும் காலங்களே.

காலங்களே சிரிக்கச் சொல்கின்றன; அவையே அழச் செய்கின்றன

காலம் பார்த்துக் காரியம் செய்தால் பூமியையே விலைக்கு வாங்கலாம்

பனிக்கட்டிக் காலத்தில் ஐஸ் பழ வியாபாரத்தையும், காற்றடிக்கும் காலத்தில் மாவையும் வியாபாரம் செய்யக் கூடாது

காலத்தால் கிடைக்கும் நல்ல நண்பர்களை இழந்து விட்டால் அந்தக் காலத்தில் அந்த நண்பர்கள் மீண்டும் கிடைக்கமாட்டார்கள்.

அதிஷ்டம் என்பது வேறொன்றுமில்லை; வருகின்ற காலத்தை ஒழுங்காகப் [illegible] வதே!


உளவள ஆலோசனை நிலையம்

யாழ் நகரில் ஓர் புதிய உதயம்!

உங்கள் மனக் கவலைகளை விட்டொழியுங்கள்!
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும் . . . . .

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற ஆலோசகர்கள்
உங்கள் பிரச்சினைகளுக்கு பரிவாயும்
அந்தரங்கமாயும் ஆலோசனைகளை
வழங்குகின்றார்கள்

ஆலோசனை நேரங்கள்: பிற்பகல்
வியாழன் 2-30 மணிமுதல் 5-30 மணி வரை
ஞாயிறு 2-30 .. 5-30 மணி வரை

மற்றைய நாட்களில் பதிவுசெய்தல் மட்டுமே
காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணி வரை
(வெள்ளி விடுமுறை தினம்)

நாடுங்கள்:-
உளவள ஆலோசனை நிலையம்
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, :: யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:
ஜோ. எகட்டன் செனித் ADS.
யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம்

## பரீட்சார்த்திகளுக்கு உதவ இதோ சில ஆலோசனைகள்

சரியான முறையில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து உயர்கல்வி பெறவும் - அதனூடாக தனது இலட்சியத்தினை அடையவும் பரீட்சை எழுதும்போது பரீட்சார்த்திகள் பின்வரும் முறைகளைக் கவனத்தில் கொள்ளல் நன்மை பயக்கும்

பாடங்களை ஆயத்தம் செய்து கொள்ளும்போது மாணவர்கள் பெற்ற குறிப்புகளும்; பயிற்சியின்போது பெற்ற திருத்தங்களையும் பரீட்சை தொடங்குவதற்கு ஓரிரு தினங்களின் முன் பரீட்சார்த்திகள் மீட்டுக் கொள்ளல் வேண்டும்.

பரீட்சை அண்மிக்கும்போது நீண்ட பாடங்களை ஆயத்தம் செய்வதனது உடல் நலத்திலும் ... தவிர்த்தல் வேண்டும்

இரவில் நெடுநேரம் விழித்திருந்து பாட ஆயத்தம் செய்வதனைத் தவிர்த்து அதிகாலையில் பாடங்களை ஆயத்தம் செய்வதே சிறந்த வழிமுறையாகும்

மனதில் இருக்கும் தெளிவு - பாடத்தில் தெளிவினை ஏற்படுத்த இதனால் வழியுண்டாகும்.

பரீட்சை ஆரம்ப தினத்திற்கு முதல் சுதந்திரமாகவும், கூடியளவு மகிழ்ச்சியாகவும். நிம்மதியுடனும் மிகவும் ஓய்வாகவும் இருத்தல் நல்லது

பரீட்சைக்குச் செல்லும்போது மிகுந்த தன்னம்பிக்கையுடன் செல்ல வேண்டும்

பரீட்சைக் காலத்தில் அக்கறை எடுப்பது அவசியம்

பரீட்சையின்று ஏற்படும் அவசரம், பதட்டம் என்பனவற்றைத் தவிர்த்துக் கொள்ள—

பரீட்சை நிலையத்துக்குச் செல்வதற்கு முன்னரே பிரவேச அட்டை, அறிமுக அட்டை என்பவற்றினையும், எழுது கருவிகள் — பொருள்கள் என்பன தயாராக இருப்பதினை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

பரீட்சை ஆரம்ப நாளில் பரீட்சார்த்தி தனது பிரவேச அட்டையினை மேற்பார்வையாள

**க. இராசதுரை**

ரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளதனால் தனது கட்டிலக்கத்தினைக் குறித்து வைத்துக் கொள்ள மறக்கக்கூடாது

இவையாவும் பரீட்சை தொடங்குவதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகும்.

இனி வினாத்தாளிற்கு விடையளிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சரியான முறையினைக் கவனிப்போம்

அளிக்கப்பட்ட விடை எழுதும் தாள் ஒவ்வொன்றிலும் பரீட்சார்த்தி முதலில் தனது சுட்டெண்ணைக் குறித்துக் கொள்ளல் நல்லதொரு பழக்கமாகும்.

தனக்கு அளிக்கப்பட்ட வினாத்தாளை நன்கு வாசித்து விடை எழுதவுள்ள வினாவைத் தெரிந்து கொள்ளவேண்டும் வினாத்தாளை வாசித்து எழுதவுள்ள வினாவினைத் தெரிய பரீட்சார்த்திக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் 15 நிமிடத்தினை செலவிடலாம்

இருக்கும் நேரத்தினை வினாவுக்குத்தக்கவாறு பகிர்ந்திட்டுக் கொள்ளுதல் வேண்டும். ஒரு வினாவுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலதிகமாக ஏனைய வினாக்களுக்கு ஒதுக்கிய நேரத்தினைப் பயன்படுத்துதல் முற்றாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்

இதனால் அடுத்த வினாவிற்கு விடை எழுத நேரம் பற்றுப்போதவுடன் இறுதியில் ஏதாவதொரு வினாவின் விடை எழுத நேரமின்றியே போகலாம்

விடை அளிக்கும்போது வினாவின் இலக்கத்தையும், வினாவின் உப பிரிவின் இலக்கத்தையும் மாறுபடாவாறு தெளிவாகக் குறித்துக் கொள்ளுதல் வேண்டும்

வினா ஒன்றின் விடையினை எழுதி அதன் தொடர்ச்சியை அல்லது அதன் பிரிவுக்கான விடை ஒன்றினை இறுதியாக எழுதுவதற்காக விடுமென்ற சந்தர்ப்பம் ஏற்படின் அதற்குரிய இடத்தை விடைத்தாளில் விட்டு ஏனைய விடைகளைத் தொடருதல் சிறந்த முறையாகும்.

இதனால் எழுதாத விடையினை இலகுவாகக் கண்டு கொள்ளவும், புள்ளியிடுவதிலும், சரிபார்ப்பதிலும் சிக்கலைத் தீர்ப்பதற்கும் உதவும்.

விடை எழுதுகின்ற ஒவ்வொரு விடைத்தாளிலும் பக்கத்தினைத் தெளிவாகக் குறித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு குறித்துக் கொள்வது பரீட்சையின் முடிவில் விடைத்தாள்களை ஒழுங்கமைக்க இலகுவாக்கும்.


சஞ்சீவி 'பாடம் பயில்வோம்' பகுதியில் இம்மாதம் 15ஆம் திகதி வெளியான க.பொ.த ப (சாதாரணம்) தமிழ்மொழி–I வினாக்களுக்கான விடைகள் வருமாறு:-

### தமிழ்மொழி -I விடைகள்

| வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 1 | — 3 | 21 | — 3 |
| 2 | — 4 | 22 | — 4 |
| 3 | — 2 | 23 | — 3 |
| 4 | — 2 | 24 | 2 |
| 5 | — 4 | 25 | — 1 |
| 6 | — 3 | 26 | — 2 |
| 7 | — 3 | 27 | — 3 |
| 8 | — 2 | 28 | — 3 |
| 9 | — 3 | 29 | — 3 |
| 10 | — 3 | 30 | — 4 |
| 11 | — 3 | 31 | 3 |
| 12 | — 4 | 32 | — 1 |
| 13 | — 1 | 33 | — 2 |
| 14 | — 3 | 34 | — 2 |
| 15 | — 3 | 35 | — 2 |
| 16 | — 2 | 36 | — 1 |
| 17 | — 2 | 37 | — 3 |
| 18 | — 4 | 38 | — 1 |
| 19 | — 2 | 39 | — 2 |
| 20 | — 3 | 40 | — 1 |

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 44



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி ........................

வயது ........................

விலாசம் ........................

ஒப்பம். ........................

போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 மோட்சம் | 1. நடிகர் திலகம் நடித்த முதலாவது திரைப்படம் |
| 6. இரவு | 2 நவரத்தினங்களில் ஒன்று. கடைசி இரு எழுத்துக்களை இழந்துள்ளது. |
| 7. இலங்கை இதில் ஓர் அங்கம் | 3. புத்தி |
| 8. வஞ்சனை | 4 பரிவு |
| 9 இறந்தவருக்கு எழுப்பப்படும் நினைவுக்கல் | 5 தமிழ் மக்கள் விரும்புவது |
| 11 கோபம் வந்த கணவன் மனைவியை இட்படியும் ஏசுவான் | 7. தொடக்கம் |
| 12. ஒரு மாதம் | 10 மேல்வீடு |
| 13 பிறருக்காக தன்னலம் ... முக்குப் தன்மை | 11 குருபக்திக்கு இந்த வேடன் நல்ல உதாரணமானான் |
| 15 ஒரு மிருகம் | 12 மழை காலம் |
| 16. கைலாசம் | 14. வசிப்பிடம் |
| 17. தோழியின் ஒரு பக்கத்தில் இருள் மூழ்கி விட்டது | 15, கப்பலை கடலில் நிறுத்தி வைக்கப் பயன்படுத்தப் படும் கருவி கடைசி எழுத்தை இழந்துள்ளது. |
| 20 தூற்று | 18. கோபாலனின் மனைவி. |
| 21 கடவுள் | 19 இறைதூதர் |
| 22 அக்கறை | |

### சொற்சிலம்பம் இல. 42 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 வைகுந்தம், 3 நிசி, 6. திருமால் 9 ரசி. 11 யசிட், 12 அங்காடி, 14. சிரங்கு, 15. சமை, 16. அலி, 17. திர, 18. ஆசனம், 19 மண்டபம், 20 புலி | 1 வைத்தியன், 2. தவில், 4. சிலை, 5. அரங்கு, 7. ருசி, 8 மாட்சிமை, 10. சிகா, 12 அங்குசம், 13. டில்லி 15. சரண், 16. அம்பு, 17. திம |

### சொற்சிலம்பம் இல. 42 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வி. எம். விக்கினேஸ்வரி, ஆனந்த குமாரசுவாமி விடுதி, யாழ். பல்கலைக்கழகம்.

இரண்டாம் பரிசு:- செல்வி. புஷ்பராணி நாகரெத்தினம், இல 58, அரசவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு:- செல்வி. தயாநிதி தில்லையம்பலம், 14ம் வட்டாரம், நெடுந்தீவு.

குறிப்பு:-

பரிசுபெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பொருத்துரியவரோ உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

## காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

### உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளும் கொள்கை

வட ஐரோப்பாவில் வாழ்ந்த காட்டுமிராண்டிகளைப் பற்றிப் பலதடவை சொல்லியிருக்கிறேன். நான் அந்த வார்த்தையை உபயோகித்ததற்குக் காரணம் ரோமர்கள் அவர்களை அந்தப் பெயரால் அழைத்ததேயாகும். அவர்களும் மத்திய ஆசியாவில் வாழ்ந்த நாடோடி ஜாதியார்களைப் போல ரோமாபுரியிலும் இந்தியாவிலும் வாழ்ந்த மக்களைவிட நாகரிகத்தில் தாழ்ந்தவர்களாகவே இருந்தார்கள்.

அவர்கள் திறந்த வெளிகளில் வசித்து வந்தபடியால் அதிக உரனும் உறுதியும் வாய்ந்து விளங்கினர். பிறகு அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ரோமாபுரியை அவர்கள் ஜெயித்து ஆண்ட காலத்திலும் இரக்கமற்றவர்களாக நடந்து கொள்ளவில்லை. வட ஐரோப்பாவில் தற்காலம் இருக்கும் தேசங்களில் வாழ்வோர் இக்காட்டுமிராண்டிகளின் அதாவது காதியர், பிராங்கர் முதலானோரின் கால்வழியில் வந்தவர்களே யாவர்.

ரோமா சக்கரவர்த்திகள் எல்லோருடைய பெயரையும் நான் உனக்குச் சொல்லவில்லை. அவர்கள் மிகப் பலர். அவர்களில் சிலரைத் தவிர மற்றெல்லோரும் தீயராகவே இருந்தனர் சிலரைக் கொடிய ராட்சதர்கள் என்றேகூற வேண்டும். நீரோ என்பவனைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய் அவனைவிடக் கொடியவர்கள் எத்தனையோ பேர் இருந்தனர்.

ஐரினி என்றோர் மாது தான் சக்கரவர்த்தினி ஆதவற்காகச் சக்கரவர்த்தியாக இருந்த தன் மகனையே கொன்று விட்டாளாம். இது கான்ஸ்டாண்டிநோபிளில் நிகழ்ந்தது.

ரோம சக்கரவர்த்திகள் யாவரினும் ஒருவர் தலைசிறந்து விளங்குகிறார். அவரது திருநாமம் மார்க்க அரேலிய அந்தோனியார் என்பது. அவர் பெரிய தத்துவஞானி என்று கருதப்படுகிறார் அவரது ஆத்ம சிந்தனைகளைக் கொண்ட நூல் ஒன்று யாவரும் படித்துப் பயனடையத் தக்கதாயிருக்கிறது.

மார்க்க அரேலியருடைய உயர்வுக்கு ஈடு செய்யக் கருதியோ என்னவோ அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவ

பகுதி : மூன்று

ருடைய மகன் ரோமாபுரியின் நெடுங்கோல் மன்னர்களில் ஒருவனாக இருந்தான்.

ரோம சாம்ராஜ்யத்தின் முதல் 300 ஆண்டுகளில் ரோமாபுரி மேற்கு உலகத்தின் கேந்திரஸ்தானமாக விளங்கியது. அது மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்த பெரிய நகரமாக இருந்திருக்க வேண்டும். சாம்ராஜ்யத்தின் சகல பாகங்களிலிருந்தும் அதற்கு அப்பாலிருந்தும்கூட அளவற்ற பேர் அங்கு சென்றிருக்க வேண்டும்

வெளிநாடுகளிலிருந்து மதுரமான உண்டி வகைகளும் வேறு பல விலை உயர்ந்த பொருள்களும் எண்ணற்ற சப்பல்களில் அங்கு வந்து இறங்கின. ஒவ்வொரு வருஷமும் 120 கப்பல்கள் செங்கடலிருந்த ஓர் எகிப்தியத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு இந்தியாவுக்குப் போயினவாம்.

பருவக்காற்று அடிக்கும் காலத்தில் அவைகள் புறப்படுவது வழக்கமாயிருந்தபடியால் காற்று அவைகளுக்குப் பெரிதும் துணை புரிந்தது. அவைகள் தென் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள அரிய பொருள்களை ஏற்றிக் கொண்டு மீண்டும் காற்றின் உதவியால் எகிப்துக்குத் திரும்பின. எகிப்திலிருந்து தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் அவ்வரிய பொருள்கள் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டன. இந்த வியாபாரத்தால் பணக்காரர்களுக்குத்தான் அதிக லாபம் கிடைத்தது. சிலருடைய ஆடம்பர வாழ்க்கைக்குப் பின்னால் பலருடைய துன்ப வாழ்க்கை மறைந்து

#### நேருவிடம் இருந்து இந்திராவுக்கு

நின்றது.

300 வருஷகாலம் ரோமாபுரி, மேற்கில் ஒப்பு, உயர்வு அற்று விளங்கிற்று. அதற்குப் பிறகு கான்ஸ்டாண்டிநோபிள் அதற்கு ஒப்பாக விளங்கியது. இந்த மிக நீண்ட காலத்தில் ரோமாபுரி அறிவுத் துறையில் பிரமாதமாக ஒன்றையும் சாதிக்கவில்லை என்பதைக் காண நாம் வியப்படைகிறோம்.

இதற்கு மாறாக புராதன கிரீஸ் மிகக் குறுகிய காலத்தில் எவ்வளவோ சாதித்திருப்பதைக் காண்கிறோம். உண்மையில், ரோம நாகரிகம் பல விதத்திலும் கிரேக்க நாகரிகத்தின் மங்கலான தோற்றம் என்றே தோன்றுகிறது ஒரு துறையில் ரோமர்கள் எல்லாருக்கும் பெரிய வழிகாட்டியாக இருந்தார்கள்.

என்று கருதப்படுகிறது.

இதுதான் சட்டம் இன்று கூடமேல் நாடு நாடுகளில் வக்கீல்கள் ரோமானியச் சட்டம் கற்றுத் தீரவேண்டும். ஏனெனில் அதுவே ஐரோப்பாவில் வழங்கும் சட்டங்களுக்குப் பெரும்பாலும் மூலகாரணமாகவும் அஸ்திவாரமாகவும் இருப்பதாகக் கருதப்படுகிறது

ஆங்கிலேயர்கள் அடிக்கடி தங்களுடைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ரோம சாம்ராஜ்யத்தோடுஒப்பிட்டு பேசுவது வழக்கம். இதில் அவர்களுக்கு பரம திருப்தி.

எல்லா சாம்ராஜ்யங்களும் ஏறக்குறைய ஒரே தன்மை கொண்டவைதான். பலரையும் சுரண்டிக் கொழுப்பது தான் அவர்களுடைய தொழில். ரோமானியருக்கும் ஆங்கிலேயருக்கும் இன்னொரு விதத்திலும் அதிக ஒற்றுமை இருக்கிறது.

இரண்டு பேருக்கும் கற்பனை சத்தி என்பது லவலேசமும் கிடையாது. உலகம் முழுமையும் தங்களுடைய நன்மைக்காகவே படைக்கப்பட்டிருக்கிறது என்னும் எண்ணத்தோடு, தங்களுக்குள்ளேயே பரம திருப்தி அடைந்தவர்களாய், நிர்விசாரமாக இவர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் செலுத்திக் கொண்டு போகிறார்கள்.

## விளங்கியும் விளங்காமலும்---

(6ஆம் பக்க தொடர்ச்சி)

கிறார். சூத்திரம் படித்து உரைவிளக்கஞ் செய்தபோது, பழைய உரையாசிரியர்கள் சொல்லாது விட்ட கருத்துக்களைக் கைலாசபதி அவர்கள் சொல்லக்கேட்ட பண்டிதமணி அவர்கள் வியப்பிலாழ்ந்து, யார் தொல்காப்பியம் படிப்பிப்பது என்று தயங்கினார்

சைவாசிரிய கலாசாலையிற் பணிபுரிந்த காலத்தில் பண்டிதமணி அவர்கள் வெகுவாகப் பிரகாசித்தார்கள் வாலிப மாநாடு, கலாநிலையம், ஈரப்பலா வளவு. திருநெல்வேலி இந்து வாலிப சங்கம், ஈழகேசரிப் பத்திரிகையுலகு, இலக்கிய ரசனை, கண்டனக் கட்டுரைகள் ஆகியவற்றில் அவர் புகழ் பரந்தது

இப்படியாகப் புகழ் பெறத் தொண்டுகள் புரிந்தவாறே சேவை செய்து செந்தமிழ் வளர்த்த காலத்திலே, சைவாசிரிய கலாசாலையில் நல்லவர் பெரியவர்களோடு நன்கு பழகிய பழக்க வாசனையினாலே, திருநெல்வேலி மக்களின் அன்புப் பிடியிலகப்பட்டமையினாலே, ஆராமை மிகுதியினால் அந்த ஊரைத் திருநெல்வேலி எனப் பாராட்டிய பண்பாட்டமையினாலே அந்தச் சூழலைவிட்டு வண்ணை நாவலர் பாடசாலைத் தலைமையாசிரியர் பொறுப்பினை ஏற்பதற்கு வெகுவாகத் தயங்கினார்.

அவர் பொறுப்பேற்க வேண்டிய கால எல்லை 1935 ஆம் ஆண்டு நெருங்கிக்கொண்டிருந்தது.

### மூலமூர்த்தி

இப்பால் சைவாசிரிய கலாசாலையிலே உப அதிபர் கைலாசபதி அவர்கள் மூலமூர்த்திபோல ஓரிடத்திலே ஒடுங்கியிருந்தவாறு வேதம் என்றால் என்ன, ஆகமம் என்றால் என்ன, வேதமந்திரம் என்றால் என்ன, ஆகமவிதி என்றால் என்ன, மந்திர திருஷ்டாக்கள் யாவர், இதிகாச புராணங்கள் என்பன யாவை நாயன்மார் தொகை அறுபத்து மூன்றுவது ஏன், பொய்யடிமையில்லாதவர் யாவர் என்றெல்லாம் சிந்தித்தார்கள். அவர்களோ தமது சிந்தனைக்குப் பண்டிதமணி அவர்களுக்கும் உள்ள தொடர்பையும் கூறியுள்ளார்கள்.

ஏதோ ஒரு பொருளைப் பற்றி, சிலபல நூல்களைத் தழுவி அறிகிறதற்கு நான் முயன்றிருக்கலாம் யோசனைகள் ஆராய்ச்சிகள் நடந்திருக்கலாம். அந்த யோசனைகளையும் ஆராய்ச்சிகளையும் எடுத்துச் சொல்லச் சிலர் பலர் சந்தித்திருக்கலாம். அவர்களுக்கு அந்த யோசனைகளை, ஆராய்ச்சிகளைச் சொல்லுகிற முறையாலே அந்தயோசனைகள் ஆராய்ச்சிகள் விருத்திப்பட, சிர்படக்கூடிய முறையும் அமைந்தது.

அந்த யோசனைகளை, ஆராய்ச்சிகளை எடுத்துச் சொல்லச் சந்தித்த முக்கிஸ்தர் ஒருவர் பண்டிதர் அவர்கள்.

—வளரும்.

## மக்கள் மகிமை

### இஸ்லாமிய மார்க்க சேவையில் முன்னோடி எம்-பி-எம்- சாபி மாஸ்டர்

என்றும் வெண்துயில் உடுத்தும் அவர் ஓர் ஆசிரியர். அமீர் சாகிப் என்று பணிவுடனும் பெருமையுடனும் அழைக்கப்பட்டார்.

இஸ்லாமிய மார்க்க சேவையில் முன்னோடியான அவர் நடுத்தர வயதுடையவர்.

கனிவான, களையான முகம். தனது காலத்தையும் நேரத்தையும், உயிரையும் உடலையும், பணத்தையும் இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் புனிதமான தப்லீக் திருப்பணியில் அர்ப்பணித்தவர்.

அவர் புகழ் முழு இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில்கூட பரவியிருந்தது.

செயலளவில் முஸ்லிம்களாக வாழாது பெயரளவில் முஸ்லிம்களாக வாழ்ந்த எத்தனையோ பேர்கள் இறை நேசர்களாக மாற அவர் முயற்சி தான் காரணமாக இருந்தது.

பாழடைந்த உள்ளங்கள் பண்புள்ள உள்ளங்களாக மாறின விரல் விட்டு எண்ணக்கூடிய

மக்கள் கூடும் பள்ளி வாசல்களும் அவரின் முயற்சியைக்கொண்டு நிரம்பி வழிந்தன. முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் இஸ்லாமியப் புத்துணர்ச்சி அவரால் ஏற்படுத்தப்பட்டது.

பகலில் மக்களை இறைவன் பக்கம் அழைக்கும் அவர் இரவில், நடுஇர

> யாழ் மாவட்ட தப்லீக் ஜமாஅத் அமீர் மர்ஹூம் எம், பி. எம். சாபி மாஸ்டர் நினைவு தினம் இன்று.

வில் வணக்கத்தில் ஈடுபட்டுத் தன்னை இறைவன்வசம் ஒப்படைப்பார். இது அவரது அன்றட வழக்கம். புதிய சோனகதெரு மஸ்ஜிதுல் அபூபக்கரின் வளர்ச்சியில் ஆரம்ப காரண கர்த்தா. சமூகப் பிரச்சினைகளில் முன்னின்று உழைத்தார்.

இஸ்லாமிய வரலாற்றில் இறைநேசர்களின் முடிவு அகால முடிவுகளாக இருந்துள்ளது. மக்கள் கூட்டம் ஒருவரை நல்லவர், உத்தமர். இவரைப்போல மனிதருக்கோ ... போல

லத்தொடங்கினுல் அந்த நபரின் உயிர் சடுதியாகக் கைப்பற்றப்படும் என்பது அறிஞர் கூற்று.

இவரைப்போல ஒரு மனிதர் — ஒரு அமீர் சாகிப் இருக்கவா போகின்றார்கள் என்று கேட்ட மக்களுக்கு, சொன்ன மக்களுக்கு வந்தது பேரிடி. 1983 நவம்பர் 27 ஒரு நண்பரின் தேவையைப் பூர்த்தி செய்யச் சென்ற அவர்,

### அக்பர் ஜின்னு

கார் விபத்தில் அகால மரணமானார்.

அவர் மரணம் யாழ் நகரை மட்டுமல்ல, முழு இலங்கையையுமே அதிர்ச்சியடையச் செய்தது. அந்த நல்ல மனிதருக்காக யாழ் நகர் சோபையிழந்திருந்தது. அவர்மறைந்துவிட்டார். ஆயிரமாயிரம் உள்ளங்கள் இன்றும் அவரை நினைவுகொள்ளுகின்றன.

### நாவற் பழத்தின் மகிமை

1. பித்தத்தைப் போக்குகிறது
2. இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது
3. கண்களுக்கு ஒளியைத் தருகிறது
4. நீண்ட ஆயுளைத் தருகிறது
5. நீரிழிவைக் கட்டுப்படுத்துகிறது.
6. பெண்களுக்கு மாதவிடாய் முறையோடு சிக்கலில்லாமல் வெளியேற வழிசெய்கிறது.

ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுளம்பு குத்துகிறதா?

பொன்னின் குழல் ஊதிவந்து உங்கள்
பொன்னை மேனியில் ஊசிபோடுகிறதா?
ஒன்று செய்யுங்கள்; சாம்பிராணி
புகைப்பது போல,
மில்க்வைற் நீம்
தூபத்தைப் புகைத்துப் பாருங்கள்.
- மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

29 - 11 - 1986 சனிக்கிழமை

பிரகாசமான சலவைக்கு
நுரைவளம் கூடிய
"புதிய சுப்ப மில்க்வைற் சோப்"
வாங்கி உபயோகியுங்கள்
ஒரு கட்டி ரூபா 4/50 மட்டுமே
2 மேலுறைகளை அனுப்பி
மில்க்வைற் செய்தியைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

★ தர்மிஷ்டரின் சூத்திரம் ● தமிழர்களின் அபிலாஷை

# இரண்டையும் இணைப்பதற்கு இந்தியாவால் முடியுமா?

தமிழர் நிலைக்கும் அரசின் நிலைக்கும் இடையில் எப்படி ஓர் இணைப்பை ஏற்படுத்துவது?

இது குறித்து சுமுக முடிவு காணுவதற்கு இணை அமைச்சர் குழு ஒன்றை இந்திய அரசு பயன்படுத்தத்தொடங்கியுள்ளது.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் 'கம்பியில் நடப்பது போன்ற நிலையில்' உள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் நாராயண் திவாரி கூறிவிட்டார்.

தமிழர் பகுதிகளை இணைக்கும் விஷயம்தான் இப்போது 'கம்பியில் நடக்கும் நிலை'யை ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை 'சூத்திரம்' (formula) ஒன்றை வைத்துள்ளது.

ஒற்றையாட்சிக்குட்பட்டதாகவும், வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லாமலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இதுதான் அந்தச் 'சூத்திரம்'

1949இல் தந்தை செல்வா சமஷ்டி அரசமைப்பு கேட்கத் தொடங்கினார். அப்போது தொடங்கி சமஷ்டி என்றால் பிரிவினை என்ற நஞ்சை சிங்கள அரசியல்வாதிகள் தங்கள் மக்கள் மனதில் ஊட்டி விட்டனர்.

அதன் பலன்தான் இன்று 'சமஷ்டி' என்ற பதத்தை பாவிக்காமல் ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட தீர்வு என்ற நிபந்தனை.

அடுத்தது இணைப்பு விஷயம். இணைப்பு தர்மிஷ்டருக்கு வேம்பானது. இணைப்பின் எதிர்ப்பிலேயே தன் அரசியலைக் கட்டி எழுப்பியவர் அவர். ஆகவே இணைப்பை 30

உள்ளும் புறமும் — குறுமுனி

வருடங்களின்பின் ஏற்பது அவருக்கு 'பிரஸ்டீஜ்' போராட்டம்.

**அவரது அவதி**

என்ன செய்வது! இந்த இரண்டு அம்சங்களையும் கொண்ட 'சூத்திரம்' ஒன்றைத் தயாரித்து வைத்துக்கொண்டு அதற்கு இணங்கக்கூடியதாக ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க தர்மிஷ்டர் அவதிப்படுகிறார்.

இந்த 'அவதி'யைத்தான் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் பெங்களூரில் வைத்துச் சொன்னார்.

தர்மிஷ்டரின் 'தர்மசங்கட' நிலையைப் புரிந்துகொண்ட பிரதமரும் அதற்கு உடன்பட்டுள்ளார்.

எந்த நிபந்தனையில் உடன்பட்டார்? அங்குதான் இந்திய ராஜதந்திரம் மீண்டும் தெரிகிறது. உங்கள் 'சூத்திரத்துக்குள்' தமிழர் அபிலாஷைகளை இயன்றவரை பூர்த்திசெய்யக்கூடிய முறையில் தீர்வைக் காணுங்கள் – இதுதான் இந்திய ராஜதந்திரம்.

**இந்தியாவுக்கு புரிந்து விட்டதா?**

தமிழர் அபிலாஷைகள் என்ன என்பது இந்தியாவுக்குத் தெரிந்துவிட்டது எனலாம்.

'ஆயுதங்களைப் பறித்தும் காவலில் வைத்தும்' தமிழரின் அபிலாஷைகள் படம்போடப்பட்டு வெளிவந்துள்ளன.

தமிழரின் பிரதேசங்கள் ஒருமொழி அமைப்பாக வேண்டும் அது மாநிலமாக இருந்தால் என்ன, மாகாணமாக இருந்தால் என்ன, மாவட்டமாக இருந்தால் என்ன.

தேவை, தமிழ்ப் பிரதேசங்கள் அடங்கிய அமைப்பு ஒன்று.

இதை நன்கு புரிந்துகொண்ட இந்தியா, இணை அமைச்சர் குழு ஒன்றைக் கடந்த வாரம் கொழும்புக்கு அனுப்பியது.

ஏதாவது ஒரு வகையிலான இணைப்பை வழங்குவது பற்றி இணை அமைச்சர் குழுவினர் நான்கு மணித்தியாலங்களாகப் பேசினார்கள்.

**நடைபாதை விஷயம்**

வடக்குடன், கிழக்கில் வழங்க இலங்கை அரசு சம்மதித்துள்ள தமிழ் மாகாணத்தை திருகோணமலை மாவட்டத்தில் ஒரு 'நடைபாதை' (Corridor) மூலம் இணைக்க வேண்டும்.

இந்த யோசனையின் அடிப்படையில் தான் இணை அமைச்சர் குழு ஜனாதிபதியுடன் பேசியதாம்.

''நாடு வேண்டாம்; ஐந்து வீடுகளாவது கொடு''— என்று பஞ்ச பாண்டவர்கள் துரியோதனனிடம் கேட்டதன் சாயல் இதில் தெரிவது போல் உள்ளது.

இந்தியாவின் இந்த யோசனை பற்றி 'பார்க்கலாம்; பரிசீலனை செய்யலாம்' என்ற சாரப்பட இலங்கை பதிலளித்தது.

இந்த யோசனையை ஏற்கமுடியாது என்று இலங்கை தலைது பக்லை தூதர் பெர்னாட் திலகரத்தின மூலம் வியாழன் இரவு அனுப்பிவிட்டதாகப் பிந்திய தகவல் கூறுகிறது.

இந்தியக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான இணை அமைச்சர் நட்வர்சிங் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை புதுடில்லிக்கு வந்த சோவியத் வெளிநாட்டமைச்சருக்கு விளக்கிச் சொல்லி இருக்கிறார்.

இலங்கை கொடுத்துள்ள 'சூத்திரத்'தின் அடிப்படையில் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட இந்திய இணை அமைச்சர் குழு மீண்டும் கொழும்பு வரலாம் என்று ஒரு செய்தி.

இலங்கை அரசின், தர்மிஷ்டர் 'சூத்திரத்'துக்குள் தமிழர் அபிலாஷைகளுக்குத் தீர்வுகாண முடியுமா?

இது தலைக்கு அளவாக தொப்பியைத் தயாரிப்பதில் முடியுமா?

அல்லது தொப்பிக்கு அளவாக தலையை வெட்டுவதில் போய் முடியுமா?

இவற்றிற்கான விடைகளை விரைவில் இந்திய இணை அமைச்சர் குழு கண்டுபிடிக்காமலா போகும்!

**தர்ம உண்டி...**

(1ம்பக்கத் தொடர்ச்சி)

லறைகளில்சிலவற்றை நாளாந்தம் தர்ம உண்டியில் இடுவதன் மூலம் தர்மம் செய்யும் மனப்பக்குவத்தை வளர்க்கலாம். பிடி அரிசி போடும் முறை இன்னும் ஒரு படி உயர்ந்தது. குடும்பத்துக்கும் பொதுவாக சிறிதளவு அரிசியைப் போடும்போது, அதில் உள்ள ஒவ்வொருவரும் தர்மம் செய்ய வேண்டிய தாகிறது.

எனவே பெற்றோர்கள் இன்றே வீடுகளில் தர்ம உண்டியல்களையும், பிடி அரிசிப் பானைகளையும் வைக்கத் தொடங்கட்டும். வீட்டுக்கு வீடு தர்மம் வளர்க்கட்டும்.

## றேகன் வரவேற்பு

வாஷிங்டன். நவ. 28

இலங்கையின் யோசனைகள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணச் சிறந்த அடிப்படை என்று அமெரிக்கா கருதுகிறது.

இப்படி அமெரிக்க ஜனாதிபதி றேகன் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவில் புதிய இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் சுசந்தா டீ அல்விஸிடம் இருந்து நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொண்டபோதுகையில் ஜனாதிபதி றேகன் இக் கருத்தைத் தெரிவித்தார். (உ-எ)

## இருவருக்கு அவசரசிகிச்சை

யாழ்ப்பாணம் நவ. 29

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட அறுவரில் இரண்டு பேர் யாழ் ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நல்லூரைச் சேர்ந்த எஸ். பிரசாத், காவெட்டியைச் சேர்ந்த சி. குகதாஸ் ஆகியோரே அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டவர்களாவர்.

ஏனைய நான்கு பேருக்கும் இந்தச் செய்தி எழுதப்படும்வரை பத்து குப்போத்தல் குளுக்கோஸ் ஏற்றப்பட்டிருந்தது. (உ-10)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ 29

க.பொ.த சாதாரண பரீட்சை மேற்பார்வையாளர் நிரந்தரநோக்குனர். இணைப்பதிகாரிகள் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை இக் கூட்டம் நடைபெறும்.

கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து வந்த உயர் அதிகாரிகள் குழுவே இக் கூட்டத்தை நடத்துகின்றது.

(உ-90-161-191)

## வங்கி ஊழியர் நால்வர் கைது

திருகோணமலை, நவ. 29

இலங்கை வங்கி திருகோணமலைக் கிளையைச் சேர்ந்த நான்கு தமிழ் ஊழியர்கள் அண்மையில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்கும்படி வங்கி ஊழியர் சங்கம் இராணுவ இணைப்பு அதிகாரியைக் கோரியுள்ளது. (உ-எ-150)

**பிரயாண ஒழுங்குகள்**

★ லண்டன்
★ ஜேர்மனி
★ சவூதி
★ குவைத்

லண்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்பும் ஆண், பெண் இருபாலாரையும் எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு சட்டிடப்பகுதிக்கும் குவைத் கிளீனர்ஸ் ஆகவும் செல்லலாம். செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஓமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது

* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.

# நெருக்கம் அடையும் இந்திய-சோவியத் உறவு

சோவியத் தலைவர் மிகெயில் கோர்பச்சேவ் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இவ்வாரம் இந்தியா வந்திருந்தார்.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த விஜயம் நேற்று வெள்ளிக்கிழமையுடன் பூர்த்தி அடைந்தது.

சோவியத் தலைவர் தமது இந்திய விஜயத்தின்போது பிரதமர் ராஜீவ் காந்தியுடன் விரிவான முறையில் பேச்சுக்கள் நடத்தி இருந்தார்.

இந்திய நாடாளுமன்றத்திலும் உரை நிகழ்த்தினார்.

''புதுடில்லிப் பிரகடனம்'' என்ற பெயரில் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

1980 ஆம் ஆண்டு லியோனிட் பிரஷ்னேவ்வின் இந்திய விஜயத்தின் பின்னர் சோவியத் தலைவர் ஒருவர் இந்தியா வந்தது இதுவே முதல் தடவை.

சோவியத் தலைவர் கோர்பச்சேவின் இந்திய விஜயத்துக்கு முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தி இரு தடவைகள் சோவியத் யூனியன் சென்றிருந்தார்.

சோவியத் வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சோவியத் யூனியனுக்கும் சென்றிருந்தனர்.

படிப்படியாக நிகழ்ந்த இந்த விஜயங்களின் உச்சக்கட்டமாக சோவியத் தலைவரின் இந்திய விஜயம் இவ்வாரம் இடம்பெற்றது.

1971 ஆம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தான் நெருக்கடியின்போது சோவியத் யூனியனின் ஆசியுடனேயே இந்தியா துணிச்சலாகச் செயற்பட்டது என்பதை எவரும் இலகுவில் மறக்க முடியாது.

கிழக்குப் பாகிஸ்தான் யுத்தத்துக்கு முன்னர் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சோவியத் யூனியனுக்குச் சென்றிருந்தார்.

சோவியத் யூனியனும் இந்தியாவும் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

அந்த ஒப்பந்தம் கடந்த 15 வருட காலமாக எத்தகைய இடையூறும் இன்றி செயற்பட்டு வருகிறது.

சோவியத் தலைவர் கோர்பசேவ் பதவி ஏற்ற பின்பு ஆசியநாடு ஒன்றுக்கு மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும்.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு இருந்து வருகிறது.

சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட சித்தாந்தத் தகராறு, சீன - இந்திய யுத்தம் ஆகியவை இந்திய-சோவியத் நட்புக்கு பலம் வாய்ந்த அத்திவாரமாக அமைந்தன.

இந்தியா சோவியத் முகாமில் உள்ள நாடுகளில் ஒன்று அல்ல.

ஆகவே இந்த நட்பு வற்புறுத்தலாலோ, நிர்ப்பந்தத்தினாலோ ஏற்பட்டதல்ல.

இதனால்தான் சோவியத் யூனியன் இந்தியாவை மதித்து சர்வதேச விவகாரங்களில இந்தியாவின் நிலைக்கு பேராதரவு வழங்குகிறது.

எனினும் இந்தியா தனது நடுநிலைமைப் போக்கில் இருந்து வழுவாது. வேண்டிய நேரங்களில் சோவியத் யூனியனையும் கண்டித்து வருகிறது.

வியாழக்கிழமை புதுடில்லியில் வெளியிடப்பட்ட டில்லிப் பிரகடனத்தில் ஆப்கானிஸ்தான் விவகாரம் பற்றியோ சீனாவுடன் சோவியத் யூனியன் நல்லுறவு முயற்சி பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. மொங்கோலியாவில் இருந்து சோவியத் படைகள் வாபஸாகும் என்று கோர்பசேவ் அறிவித்துள்ளது தெரிந்ததே.

சோவியத்- இந்திய உறவுக்கு சோவியத்-சீன உறவு தடங்கலாக இருக்கக் கூடாது என்பதில் சோவியத் தலைவர்கள் அதிக கரிசனை காட்டி வருகின்றனர்.

இந்தியாவுக்கு 60 கோடி பவுண் கடனுதவி வழங்கும் ஒப்பந்தம் ஒன்றும் புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எண்ணெய்ஆராய்ச்சி, எஃகு தொழிற்சாலை, அணைக்கட்டு ஆகியவற்றுக்கு இந்தக் கடனுதவி பயன்படுத்தப்படும்.

உபகண்டத்தில் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி வலுவடைவதற்குப் பதிலாக அமைதி ஏற்பட இந்திய-சோவியத் உறவு வழிவகுக்க வேண்டும்.

**உலகஉலா — என்.பி.சீலன்**

## ஒரே சூலில் 3 குழந்தைகள்

யாழ்ப்பாணம், நவ 29

ஒரே சூலில் மூன்று குழந்தைகள் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் பிறந்தன.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வித்தியானந்தன் குணவதி என்ற பெண்மணிக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன.

மூன்று குழந்தைகளும் ஆண் குழந்தைகள்.

முதல் இரண்டு குழந்தைகளும் 2 கிலோ 200 கிராமும் மூன்றாவது குழந்தை 2 கிலோ 100 கிராமும் எடை இருந்தன. (உ-10)

## புதன் வரை வகுப்புகள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ் பல்கலைக்கழக விரிவுரை வகுப்புகள் யாவும் இன்றுமுதல் புதன்கிழமைவரை பகிஷ்கரிக்கப்படும்.

விஜிதரனை விடுதலை செய்யக்கோரி யாழ்பல்கலைக்கழகமாணவர்களால் நடத்தப்பட்ட சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதை அடுத்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மாணவர் அமைப்புக்குழு பிரதிநிதி இதனைத் தெரிவித்தார்.

விஜிதரன் விடுதலையாகும் வரை தமது போராட்டம் சிறியளவில் நடத்தப்படும் என மாணவர்கள் தெரிவித்தனர். (உ-10)

**உண்ணாவிரதம்---**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

த. விமலேஸ்வரன் (வணிக பீடம்), சி. குகதாஸ்) விஞ்ஞானபீடம்) ஜே. கே. செல்வநாயகம் (கலைப்பீடம், மு. விஜயகுமாரி (கலைப்பீடம்) உருத்திரமூர்த்தி ஔவை (விஞ்ஞானபீடம்) ஆகியோரும் நல்லூரைச் சேர்ந்த எஸ். பிரசாத் என்பவருமே உண்ணாவிரதம் இருந்துவந்தனர். (உ-10)

**பிரயாண ஒழுங்குகள்**

★ சவூதி அரேபியா ★ சிங்கப்பூர்
★ குவைத் ★ ஜேர்மனி ★ லண்டன் U.K.

1. சவூதி அரேபியாவுக்கு (Open Visa)
தொழில் வாய்ப்புடன் உடனடி பிரயாணம்
மேற்கொள்ள விரும்புவோர்
உடன் தொடர்பு கொள்ளவும்.
2. சிங்கப்பூர்
தொழில் வாய்ப்புடன் செல்லவிரும்பும்
ஆண்களும் பெண்களும்
உடன் தொடர்பு கொள்ளவும்.
3. குவைத்
குவைத் டிறைவிங் லைசென்ஸ் உள்ளவர்
உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
4. ஜேர்மனி - லண்டன்
செல்ல விரும்புவோரும்
உடன் தொடர்பு கொள்ளவும்.

(குறிப்பிட்ட வெற்றிடங்கள் மட்டும் உண்டு)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS
றை ஸ்ரார் றவல்ஸ்
No. 6, நவீன சந்தை மேல்மாடி.
தொலைபேசி இல: 23831

மு. கு: யாழ்நகர் நிலைமை சீரற்று, எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ் வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.
71, குருசோ வீதி, (சுண்டுக்குளி) யாழ்ப்பாணம்.
வே. குகராஜா, மயிலியதற்புலம்
கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
N. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

**இலங்கைப் பல்கலைக் கழகங்களின்**

**வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்**

கல்வியாண்டு 1987 / 88

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி
வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் (2 ஆவது பிரிவு)

ஜனவரி மாதம் 5ஆம் திகதி (05-01-1987) ஆரம்பமாகின்றன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B. A.) விஞ்ஞானமாணி (B. Sc) வர்த்தகமாணி (B. Com)
(கணிதம்)

★ 3 வருடங்களில் B. A., B. Sc. பட்டதாரியாகலாம் ★ 4 வருடங்களில் B. Com. பட்டதாரியாகலாம்
(பட்டதாரிகளானால் உடனடி வேலை வாய்ப்புக்கள்)

விண்ணப்பங்கள் டிசம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் பெற ''பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரியூட்'' என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக் கட்டளையுடன் 9'' x 4'' அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர், ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.)
Branch: 101/1, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 29-11-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane, Power House Road, JAFFNA. Phone: 24805, 22073.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org